# கரவை கிழார் கவிதைகள்



அன்பளிப்பு:-

யோ-பிரதாபன்

... COLLEGE ...

SITHY VINAYAGAR
EARLALAI WEST
CHUNNAKAM
LIBRARY

BF/23

# கரவைகிழார் கவிதைகள்

" கரவைகிழார் "

க. கந்தசாமி,
''மதி ஒளி வாசா''
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.


SITHY VINAYAGAR
BF/23
EARLALAI WEST
CHUNNAKAM
LIBRARY

[பதிப்புரிமை ஆசிரியர்க்கே.]

பேராசான் தென்புலோலியூர் கந்தமுருகேசனர்
வழங்கிய ஆசி(ஆசு) கவி

திருந்தியபுகழ் பண்டிதர ஏ தேட—
நற்றமிழெல்லாம் நாவுடைய நின்றது
பரந்து உலகம் பல பரப்புகழ்த்
திசைமுகா என்று செய் காந்தனொடு
கந்தமுருகேசன்
3.3.1960

[பேராசானுக்கு இந்நூல் சமர்ப்பணம்]



முதற் பதிப்பு — 1971

விலை: ரூபா 2 - 00

இப்புத்தகம் 10, மெயின்வீதி, யாழ்ப்பாணம், கலைவாணி அச்சகத்தில் அச்சிடப்பட்டு திரு. க. கந்தசாமி ("மதி ஒளி வாசா". கரவெட்டி கிழக்கு கரவெட்டி.) அவர்களால் வெளியிடப்பட்டது. 125—71

செந்தமிழ்க் கலைமணி, வித்துவான், பண்டிதர்
கா. பொ. இரத்தினம்
பி. ஏ. (ஆனசு) இலண்டன்; எம். ஏ., பி. ஓ. எல் (சென்னை)
பாராளுமன்ற உறுப்பினர்
(ஊர்காவற்றுறை) அவர்கள் வழங்கிய

# முகவுரை

உணர்ச்சித் துடிப்பு, உள்ளத்து அழகு, படைப்பு வீறு, கற்பனைச் செறிவு, மொழித்திறன், நிகழ்ச்சிகளின் தாக்கம், சூழ்நிலையின் உந்தல் முதலியவற்ருல் உருவாக்கப்படுபவனே உயர்ந்த கவிஞன். இத்தகைய உயர்ந்த கவிஞனின் படைப்புக்களே கரவைகிழார் கவிதைகள் என்பதை இக்கவிதைகளைப் படிப்போர் இலகுவில் அறியலாம்.

ஒரு பாராளுமன்ற உறுப்பினன் என்ற நிலையில் அரசியல் மோதல்கள், புரட்டல்கள், அநீதிகள், இனப் புறக்கணிப்புக்கள், வகுப்பு வேற்றுமைகள் முதலியவற்றை மட்டுமன்றி மக்கள் வாழ்வில் எல்லாத் துறைகளிலுமுள்ள குறைகள், கொடுமைகள், பழிகள் பாவங்கள், ஊழல்கள், ஊனங்கள், சூழ்ச்சிகள் சுரண்டல்கள் முதலியவற்றையும் பச்சைப் படியாக அறியும் வாய்ப்பு எனக்கு உண்டு. இவற்றின் தாக்கங்கள் கவிஞர் கரவைகிழாரை ஆட்டி அசைத்தமையால் அவர் உள்ளத்து ஊற்றெடுத்த கவிதைகள் பல இத் தொகுதியை அணி செய்கின்றன. அதிகாரத்தில் உள்ளவர்களை ஆதரிப்பதையே தொழிலாகக் கொண்ட போலிகளையும், மக்களை ஏமாற்றுகிறவர்களையும், நாடறியக் கைக்கூலி பெறுபவர்களையும், மொழியை, இனத்தை, மானத்தை

விற்றுப் பிழைப்பவர்களையும், ஒட்டார் பின் சென்று கூனிக்குறுகி வாழும் உன்மத்தர்களையும் மதித்துப் பேணிப் போற்றி புகழ்ந்து துதிபாடும் எழுத்தாளர்களையும், பத்திரிகையாளர்களையும், கவிகளையும் கண்டு வாடி வதங்கி நொந்து நைந்து கொதிக்கும் உள்ளங்களையும் குளிர்விக்கும் கவிதைகள் பல இக்கவிதைத் தொகுதியில் உள்ளன.

''இலங்கையில் நம்இனம் இடர்ப்படும் இத்தினம்
நலத்தினை நாடியே நாட்டுக் குழைத்திட
இலச்சோப லட்சம் இளைஞர் இருந்தும்
இலட்சியப் பற்று இதயத்தில் கொண்டோர்
எத்தனை பேரோ எண்ணியே பாரீர்
.........................................................''

எனத் தமிழ் இளைஞருக்கு அவர் விடுக்கும் வேண்டுகோளை படித்துப் பாருங்கள்.

கூலிக்கு மாரடிக்கும் எழுத்தாளர்களை அவர் கேட்கும் கேள்விகள் இன்று தன்மானத்தமிழர் எல்லாரும் கேட்கும் கேள்விகளே ஆகும்.

'ஈழத்தின் எழுத்தாள நண்பனே நின்
    எழுத்துக்கு தமிழ்மொழிதான் மூச்சே என்றால்
கூழுக்குக் கொள்கையினை ஏலம் போடும்
    கும்பலிலே நின்குரலேன் ஒலிக்க வேண்டும்
தாழிட்டுத் தமிழ்த்தாயின் இதயந் தன்னை
    தருக்கர்கள் தத்தளிக்கச் செய்யும் நேரம்
ஏழடுக்கு மாடியிலே இருந்து கொண்டே
    எழுதிநீ குவித்துத்தான் என்ன காண்பாய்.

''துள்ளி வரும் வேல்கண்டு துவளல் வெட்கம்'' என்னும் தலைப்பில் பாடியுள்ள ஐந்து பாடல்களும் அவற்றைப் படிக்கும் எழுத்தாளர்களை நாங்கள் பகல்



வேடக்காரர்களா என்றும் தமிழுக்கு அழிவு நேரும் போது வீணரைப் போல் மூலையில் குந்தியிருக்கிறோமா என்றும் பலவாறு சிந்திக்கச் செய்யத்தக்கன.

''தம்தாயின் விலங்கொடிக்க மாற்றானை நம்பும்
    தயவிரக்க மில்லாத தனயரா தமிழர்
வெம்கொடுமை வறுமைதான் வந்துற்றா லென்ன
    வீற்றிருக்கும் பெரும்பதவி விலகினா லென்ன
''உம்'' கூட்டி மாற்றானின் ஆணைதனை ஏற்றே
    உயிருட்டம் தந்தவளைச் சாகடிக்க மாட்டோம்
சிம்மங்கள் சிறுநரியின் தந்திரத்தைக் கண்டு
    செயலற்றுக் கிடந்திடுதல் அறிவுடைமை அல்ல''

''வாழும் பூமி பறிபோகும்
    வாயால் பேசும் மொழி மாயும்
தாழும் நிலையும் தருக்கர்களின்
    தாளைப் பணிந்து நீயுழல்வாய்
கூழும் உடையும் பிறபலவும்
    கொள்கை விற்றுப் பெற்றிட்டால்
நாளும் வசையால் நீ மாள்வாய்
    நானிலம் காறி உமிழ்ந்திடுமே.''

எனும் கவிஞர் கரவைகிழாரின் பாடல்கள் படிக்கப் படிக்க உள்ளத்தை உருக்குகின்றன;, ஊக்குகின்றன; உயர்த்துகின்றன. இக்கவிதைத் தொகுதியிலுள்ள விடுதலைக் கவிதைகளைப் படிக்கும் போது ஆங்கிலேயரின் ஆட்சியை அழித்திடப் பாடிய பாரதியாரின் வீரப்பாடல்கள் நினைவுக்கு வருகின்றன. விடுதலைக் கவிதைகளில் உள்ள பாடல்கள் யாவும் தாய் மொழிப் பற்றில், தன்மான உணர்ச்சியில், விடுதலை வேட்கையில், சிறுமை தாங்காக் கொதிப்பில் தோன்றியன.

விடுதலைக் கவிதைகள் மட்டுமன்றி "இறைவணக்கம்","சான்றோர்","குறுங்காவியம்","பன்மணித்திரள்" எனும் பகுதிகளையும் கொண்ட இந்தக் கவிதைப் பூங்காவினுள் நுழைந்து நுகர்வோர் கவிஞர் கூற்றைத் தழுவிய எம் கூற்றை தம் கூற்ருகவும் கொள்ளுவார்கள்.

எனதுரையை முடிக்க முன் உள்ளத்தில் ஒலிக்கும் ஒரு பாடலை உரைத்திட விரும்புகிறேன்.

"மாற்ருன் அரசு மாணிக்கம்
மலையாய்க் குவித்துத் தந்தாலும்
காற்றில் பறக்கும் பதராக
கருதி அவற்றை நாடாதே
ஊற்று நீரை ஒதுக்கிநீ
உப்பங் கழியை ஏற்காதே
சோற்றுத் துருத்தி உடல்வாழ
சுதந்திர உணர்வை மாய்க்காதே"

## அணிந்துரை

கவிதை என்பது எத்தகையது? அழகு வசன நடை கவிதையாய் விடுமா? இல்லை. வசன நடையிலும் பார்க்க பல கோடி மடங்கு சக்தி பாய்ச்சப் பட்டதாயே கவிதை பிறக்கின்றது. பட்டதொட்ட உள்ளங்களிலெல்லாம் உணர்வின் பெருக்கத்தை, உள்ளத்துடிப்பை, உணர்ச்சி அலைகளின் மோதலை, குமுறலை, புரட்சியை ஏற்படுத்த வல்லவை கவிதைகள். இத்தகைய அபூர்வ சக்தியை உணரும் அனுபவம் கரவைகிழார் அவர்களின் கவிதைகளைப் படிக்கும் போது எவருக்குமே ஏற்படுகின்றது.

கரவைகிழார் ஒரு கவிஞன்; உண்மைக் கவிஞன்; தான் கொண்ட கொள்கையிலிருந்து நிலை பிறழாத நேரிய நெஞ்சம் கொண்ட தமிழ்க் கவிஞன். அவரது கவிதைகளிலே அறமும் விறலும் தோளோடு தோள் நிற்கின்றன. சுதந்திர தாகமே முழுமூச்சாய் இயங்குகிறது. பிறரை இயங்கவைக்கும் சக்தி கவிஞர் கரவைகிழாரின் கவிதைகளில் நிறைந்து நிற்பதைக் காண்கிறேன். பாரதியாரைப் போற்றுகிருேம்; பாரதி தாசனைப் போற்றுகிருேம். அதுபோல இன்றைய ஈழத் தமிழினத்தின் விடிவுக்கும் வாழ்வுக்கும் எத்தகையதொரு கவிஞன் தேவையோ அத்தகைய கவிஞனுய் கரவைகிழார் "சுடச்சுடரும் பொன் போல" ஒளிவீசி வருவதைக் காண்கிறேன்.

அவர் ஒளியாக மட்டும் இலங்க விரும்புபவரல்லர்; பெருந் தீயாகத் தன்னை மாற்றிட — மாய்த்திட — துடிப்பவர் கரவைகிழாராவர். அந்த வீறிலே எழும் நாதம்தான் அவரது சுதந்திர கீதங்கள்.

கவிஞர் கரவைகிழாரின் குரல் சுதந்திர கீதத்துடன் மட்டும் நின்றிடவில்லை. விழுமிய அத்தனையையும் அது பாடுகின்றது. இறைவனை அழகு தமிழால் வழுத்தி, குருவை வணங்கி, சான்றோரைப் புகழ்ந்து, குறுங்காவியம் பல பாடி, சமூகக் குறைவிலும் நிறைவிலும் மூழ்கி எழுந்து, இயற்கை எழிலில் தோய்ந்து, தமிழோடு கூடி கவிஞரின் குரல் பல்வேறு கவிதைகளாய் நின்று ஒலிக்கின்றது.

இவ்விதம் எம்முடன் ஒன்றிப் பழகும் கரவைகிழார் அவர்கள் எந்த ஊரிற் பிறந்தார்? எப்போது பிறந்தார்? அவர் படித்தது எங்கே? என்பதை அறிய விரும்புவோர்க்கு சில விபரங்கள்:-

அவர் பிறந்த ஊர் கரவெட்டி. திகதி 23-5-1931. இயற்பெயர் கந்தசாமி. தந்தையார் பெயர் கந்தவனம். தாயார் பெயர் சின்னம்மா. ஆரம்பக்கல்வியை உள்ளூர்ப் பாடசாலையிலும் பின்னர் உயர்தரக் கல்வியை பருத்தித்துறை காட்லிக் கல்லூரியிலும் பயின்றார். அரசாங்க சேவையிலேயே இவரது வாழ்க்கை வருவாய் ஆரம்பமாயிற்று. எனினும் கரவைகிழாரின் வாழ்க்கையில் அரசாங்க சேவையென்பது புறவாழ்வாய் மட்டுமே அமைய முடிந்தது. உள்ளமோ தமிழ், தமிழெனத் தமிழிலேயே ஊறித் திளைப்பதாயிற்று. ஈழத்தின் பகுத்தறிவுத் தந்தை — புலவர் பெருந்தகை — கந்தமுருகேசனாரிடம் கல்விபயிலும் வாய்ப்பும் கிடைத்தது.

தமிழ்ப் பணி என்பது யாது? தமிழ்ப் பணி என்பது தமிழைக் கொண்டு "தான்" வாழ்வதல்ல; தமிழை மெச்சுவதுமட்டும் அல்ல; தமிழ் வாழ, தமிழினம் வாழ, தன்னாலானதைச் செய்வதே தமிழ்ப்பணி என்ற எண்ணம் கரவைகிழாரின் நெஞ்சத்தில் இடம் பெறலாயிற்று. இதன் பரிசு யாது தெரியுமா? 1964-ம் ஆண்டு யூன் மாதம் தமிழ் தொழிற் சங்க வாதியாய் நின்று இயங்கிய கரவைகிழார் அவர்கள் அரசாங்கத்தினரால் திடீரென கட்டாய ஓய்வுக்கு உள்ளாக்கப் பட்டார். காரணம், அரசகரும மொழிச் சட்ட அமுல் நடவடிக்கை என அறிவிக்கப்பட்டது. தமிழ் எழுதுவினைஞர் சங்கம் நடாத்திய தொழிற்சங்கப் போராட்டத்தில் தம் பங்கைச் செலுத்த கரவைகிழார் தவறியதேயில்லை.



வீரனின் உடலிலே பல ஈட்டிகள் பாய்ச்சப்படுவதும் இயல்பல்லவா? கரவைகிழார் மீண்டும் "கட்டாய உத்தரவில்" அரசாங்க சேவைக்கு அழைக்கப் பட்டார். இவ்வித போராட்டங்கள் பலப்பல!

கரவைகிழார் அவர்கள் குடும்பச் சுமையில்லாத தனி மனிதரா? அல்ல, அல்ல! தன் கணவரின் குறிப்பறிந்தொழுகும் நல்லியலாளான கமலாதேவி என்னும் வாழ்க்கைத் துணைவியைக் கொண்ட கரவைகிழார் ஐந்து குழந்தைகளுக்குத் தந்தையுமாவர். எனினும் உலகின் அனைத்திலும் கரவைகிழார் அவர்களுக்கு அண்மித்து நிற்பது தமிழே ஆகும். இந்த வகையிலே தான்

"பைந்தமிழ் அன்னைக்குப் பாமாலை சூட்டிப்
பாவையர் நாங்கள் பணிந்திடுவோம்"

எனும் அவரது "மங்கையர் சபதம்" போன்ற பாடல்கள் தமிழ்வானிலே அழியாத ஓவியமாக திகழப் போகின்றன. அதுபோலவே கரவைகிழாரின் விடுதலைக் கவிதைகளும் வாழப்போகின்றன, வாழ்வளிக்கப் போகின்றன என வலியுறுத்திக் கூறலாம்.

அரிய கவிஞன், சிறந்த பேச்சாளன், நல்ல நாடக ஆசிரியன், தெள்ளுதமிழ்க் கட்டுரையாளன், பண்பு நிறைந்த மனிதன், கண்ணியமும் கட்டுப்

பாடும் கொண்டோன். அடக்கம் ஒழுக்கம் ஆகிய வற்றை அணிகலனுய்க் கொண்ட கவிஞன் — தமிழ்த் தொண்டன் — கரவைகிழார் இன்று என்ன செய்து கொண்டு இருக்கிருர்? தமது 39 வது வயதிலேயே, கடந்த வருடம் மார்கழி மாதம், அரசாங்க சேவை யிலிருந்து "ஓய்வு" பெற்றுக்கொண்டு, தமிழ்ப் பற் றுக்கொண்ட, தமிழ்த் தொண்டு பூண்ட தமிழ்க் கவிஞனுய் இவர் வாழ்கின்ருர். இவரது கவிதைகளும் வாழ்கின்றன; தொடர்ந்தும் வாழும். தமிழ்ச் சமூகமே இவற்றை ஏற்றிடு.

புங்குடுதீவு
2-3-1971.

நாக. பத்மநாதன்.

# முன்னுரை

"வண்மையிலே உளத்திண்மையிலே-மனத்
தண்மையிலே மதிநுண்மையிலே
உண்மையிலே தவருதபுலவர்
உணர்வினிலே உயர்நாடு"

என மக்கள் கவிஞர் பாரதி பாடினுர். உண்மை யிலே தவருத புலவர்கள் உணர்வுதான் ஒரு நாட்டை உயர்த்தி, உய்வு தருகின்றது. நாட்டின் நாடி நரம்பு போன்றதுதான் கவிதை. சிறுமைகண்டு பொங்கி, தாம் வறுமையில் உழன்று வாடும் போதும், இலட்சியத் தைக் கைவிடாது, எளிமை கண்டு இரங்கி, நாட்டு மக்களது இன்ப துன்ப உணர்வில் பங்கு கொள்ள இடையருது துடியாய்த் துடிக்கும் கவிஞனின் உள்ளத் தில் கவின்மிகு கவிதை பிறக்கிறது. கவிஞனின் உள் ளத்தில் எழுந்த விழுமிய வீறு கொண்ட உணர்வு வெள்ளம், மின்சக்தியைப்போல, கவிதைக்கு ஊடாகக் கவிதையை படிப்பவரின் உள்ளத்தில் பாய்ந்து உணர்வு கொள்ளச் செய்கிறது. இலக்கியம் ஒரு மலே என்ருல் அதன் சிகரம் போன்றது கவிதை. அத்தகைய கவிதை ஈழத்தில் இன்று எடுப்பார் கைப்பிள்ளே போல ஏங்கித் தவிக்கின்றது. கவிதைத் துறைக்கு ஆக்கமும் ஊக்க மும் தந்து ஆதரிப்போர் தொகை அருகி வருகிறது. தமிழ் மரபைப் பேணி கவிதைத் துறையும் கவின் பெற்று விளங்கிட இலக்கிய கர்த்தாக்களும் நாட்டு மக்களும் ஆர்வமும் அக்கறையும் கொண்டு ஆவன செய்திட வேண்டும்.

கடந்த பல ஆண்டுகளாக யான் யாத்த கவிதை களில் சிலவற்றைத் தொகுத்து வெளியிடும் ஆவல் எழுந்தது. எழுத்துத் துறையில் என்றும் எனக்கு

ஊக்கமும் ஆக்கமும் தந்து உற்சாகப் படுத்தும் எனது கெழுதகை நண்பர் நாக. பத்மநாதன் அவர்கள் துணையும் தூண்டு கோலுமாக விளங்கினார். எனது பேராசான் தென் புலோலியூர் உயர்திரு. கந்தமுருகேசனார் ஈந்த ஆசியும் அன்பும் புனை பெயரும் கவிதைத் தொகுதியாக ஒளிர்கிறது. பேராசான் அவர்களை 3 - 3 - 1960ல் யான் முதன் முதலாக சந்தித்தபோது அன்னார் வழங்கிய ஆசி (ஆசு) கவிதையும் இந்நூலில் இடம்பெற்றுள்ளது. புலவர் பெருந்தகையிடம் இலக்கிய இலக்கணம் கற்றிடக் கிடைத்த வாய்ப்பினைப் பெரும் பேருகவே கருதுகின்றேன். பேராசானின் நீங்காத நினைவாக அன்னாருக்கு இந்நூலைச் சமர்ப்பணம் செய்கின்றேன்.

இக்கவிதைத் தொகுதியில் இடம்பெற்றுள்ள கவிதைகளில் பல ஏற்கனவே பிரபல பத்திரிகைகளான வீரகேசரி, ஈழநாடு, தினகரன், சுதந்திரன் ஆகியவற்றிலும் வேறு சஞ்சிகைகளிலும் வெளி வந்தவை. அப் பத்திரிகைகளுக்கும் சஞ்சிகைகளுக்கும் எனது மனமார்ந்த நன்றி உரியது.

இந்நூலுக்குத் தமக்கே உரிய தெள்ளு தமிழ் நடையில் முன்னுரை வழங்கிய உயர்திரு. செந்தமிழ் கலைமணி கா. பொ. இரத்தினம் நா. உ. அவர்களுக்கு எனது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அணிந்துரை வழங்கிய எனது கெழுதகை நண்பர் திரு. நாக. பத்மநாதன் அவர்களுக்கும் எனது இதய பூர்வமான நன்றியை இயம்புகின்றேன். இந்நூலின் அட்டைப் படத்தை அழகாக தீட்டித் தந்த யாழ்ப்பாணம் சித்திர ஆசிரியர் திரு. செ. சிவப்பிரகாசம் அவர்களுக்கும் எனது நெஞ்சு நிறைந்த நன்றியைக் கூறுகின்றேன். இந்நூல் வெளிவருவதற்குப் பல



வகையிலும் உதவி நல்கிய எனது மைத்துனர் திரு க. வேலுப்பிள்ளை அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றி நவில்கிறேன்.

"உணர்வே அமுதம், உணர்வு தெய்வம்" என உள்ளத்தால் உணர்ந்து பாடினார் பாரதி. அத்தகைய உணர்வு வெள்ளத்தையும், கற்பனையையும், கருத்தையும், ஓசைநயத்தையும் இக்கவிதைத் தொகுதி தருகிறதா என்பதை காலந்தான் தீர்மானிக்கும். தமிழ்மீது பற்றுக் கொண்ட அன்பர்கள் அனைவரும் இவ்வாக்கப் பணிக்கு ஆதரவு நல்க வேண்டும் எனக் கனிவுடன் வேண்டுகிறேன்.

வணக்கம்.

'கரவைகிழார்"

# உள்ளுறை


## இறை வணக்கம்

- பொன்னூசல் ... 1
- அபயம் தந்த அருளன்னை ... 4

## சான்றோர்

- வித்தகன் வீரன் விரிமனத்தான் ... 7
- கந்த முருகேசனுர் கவின் தமிழ்க் காவலர் ... 9
- பூத்தான் நிதம் கவிதைப் பூ ...10
- அண்ணு பத்து ...11
- நாமம் என்றும் பீடுற வாழும் ...13
- மீள ஒளி உமிழ்ந்த பாட்டு ...15
- வல்லானன் சொல்லானன் வன்னியசிங்கம் ...18
- பாவேந்தன் பாரதிதாசன் ...20

## விடுதலைக் கவிதைகள்

- திருப்பள்ளி யெழுச்சி ...23
- துடித்தெழுந்து செயலாற்றத் தூண்டினனே ...23
- பைந்தமிழர் அறப்போரே வாகை சூடும் ...25
- விடுதலை வீரனே கேளாய் ...27
- துள்ளிவரும் வேல்கண்டு துவளல்வெட்கம் ...29
- இளங்கவி கேளாய் கொஞ்சம் ...31
- நாட்டிலே சுதந்திர விளக்கேற்றி வைப்பான் ...33
- எழுதாக் கவிதை ...35
- பேசுகின்ற மொழி காப்போம் உயிர்கொடுத்தேனும் ...37
- பாடிடு இன்று .. 38





- உயிரை உணர்வை உடலைத் தாரீர் ...40
- உறையிட்ட வாளைப் போல உறங்கிடாதெழுதல் எப்போ ...41
- வளமிகு இனத்தைப் பேணிடுவோம் ...43
- சுதந்திரம்விரும்புவோர் வாரீர்; வாரீர்! ...45
- கவிதை ஊற்று ...47
- தண்ணருள் மண்ணே அன்னை ...49
- இன்பத்தை வேண்டி நின்றே இலக்கையே மறந்தாரடி ...51
- ஊறுது நின்றிடா தொண்டதமிழுணர்வம் ...52
- வடுப்பட்ட தேகமே வீரன் வாழ் இல்லம் ...53
- விடுதலை வீரனாய் விளங்கிடத் துணிந்திடு ...54
- மாளும் நிலையை மகிழ்வுடனே மாத்தமிழ் காக்க ஏற்போம் நாம் ...55
- நாடிடு நல்லதை நலத்தினைப் பெருக்கிட ...57
- நாளுந்தன் நாட்டிற்கே உழைத்து வாழ்வான் ...58
- போற்றுகின்றோம் நின் பணியை ...59
- குவலயமே காணுத கொள்கை வீரர் ...60
- சிந்தித்தது போதும் செயலில் இறங்கிடுவாய் 63
- மங்கையர் குலத்துக்கீனம் ...64
- மங்கையர் சபதம் ...66
- உரிமைப் பெண் ...67
- உள்ளந் தெளியமொழி வேண்டும். ...70
- பேசும் மொழியே பெருந்தெய்வம் ...71

## குறுங்காவியங்கள்

- குறை ஈந்த நிறைவு ...73
- கடலிற் கலந்த கண்ணீர் 79

பன்மணித்திரள்


என்றன் உயிரே இன் தமிழ்த் தாயே. ...85

அழகும் அருளும் ...87

உறுதியாய் இருந்திடு உண்மையை நாடிடு .. 91

தொண்டு எதற்கு ...93

தமிழ் மங்கை ...95

இனிய வாழ்வு இலிகி தர்க்கு ஏது ...100

காதலும் கயமையும் ...103

சங்கீதப் பறவை .. 105

உள்ளத்தால் உயர்ந்து வாழ்க ...108

வாணியின் வீணை ...86

பொங்கல் ...89

வள்ளுவன் வள்ளல் ...92

கறுப்பனின் நிலை ...94

இன்னமும் உந்தன் நெஞ்சில் இரக்கமேன் சுரக்கவில்லை ...98

நட்பு ...101

அண்ணல் இயேசு ...104

அழகுற அமைத்தே உயர்த்திடுவோம் ...107


# இறை வணக்கம்

# பொன்னூசல்

## காப்பு

உள்ளத் தெளிவுடனே ஒள்ளியநின் பாதத்தை
தெள்ளு தமிழால் தினம்பாடி—கொள்ளைகொள்ளும்
அன்பருளைப் பெற்றிடவே ஆனைமுகத் தோனேநின்
இன்னருளை ஈவாய் இனிது.

அகங்குழைந் தழுதழுதுதொழும்
அடியவர் தமக்கே
இகம்பரம் இரண்டுந்தரும்
எழில்சித்தி விநாயகன்
முகம்பொழி அருளினைநினைந்தே
மொய்குழல் மடந்தையர்
சுகம்பெறச் சுந்தரம்மிளிரப்
பொன்னூசல் ஆடாமோ.

மன்னர்கள் மாண்புறஆண்டே
மறைகாத்த மாந்தையில்
இன்னல்கள் தோன்றியேயிருள்
சூழ்ந்திட்ட போதினில்
அந்நியரா திக்கம்மறைந்தொழிந்
திடநமக்(கு) அண்ணலவன்
முன்னியருள் செய்ததிறம்பாடிப்
பொன்னூசல் ஆடாமோ.

அன்பருள் அறந்தந்தருளும்
அம்மையப்பன் மைந்தனை
உன்னியுன் னியுளமுருக
உரோமஞ்சிலிர்ப்ப வாயார
பன்னிப்பன்னி யவன்கமலப்
பாதம்பணிந்தே பாடிநம(து)
என்புமன் பால்நைந்துருகப்
பொன்னூசல் ஆடாமோ.

மங்கலம் மனைமாட்சிமற்றும்
இங்கிதமெல்லாம் பெற்றிடவே
அங்கயற் கண்ணியினரும்மகவாம்
விநாயகனைப் போற்றிடுவோம்
இங்கெமக் கிடர்விலகியின்னருள்
சேர்ந்திடவே என்றும்நாம்
பொங்கிடும் உளத்தொடுபாடிப்
பொன்னூசல் ஆடாமோ.

நாட்டினில் நல்லறமோங்கிட
நனிமழைபெய்திட நாவினில்
ஏட்டினில் இன்தமிழ்மிளிர்ந்திட
எழில்சுவையீந்திடும் காவியப்
பாட்டினில் பைந்தமிழ்ப்பாவலர்
பாடி ஏத்திட விநாயகன்
ஊட்டிடும் அருள்நினைந்தே
பொன்னூசல் ஆடாமோ.

தஞ்சமெனத் தாள்பணிந்திடும்
தொண்டர்க்குத் தண்ணளி
விஞ்சிடஈந் திடும்விநாயகன்
விக்கனம் தீர்த்திடுவான்
வஞ்சியர் நாம் அஞ்சுதலின்றியே
குஞ்சரமுகக் கொழுந்தனை
மிஞ்சிடுநேசம் கொஞ்சிடப் பாடிப்
பொன்னூசல் ஆடாமோ,



முருகனுக்கு மூத்தபுதல்வனை
மொட்டவிழ் மலர் கொண்டே
உருகுநெஞ்சில் பெருகுபக்தியினால்
ஒண்தமிழ்ப் பாக்கொண்டே
அருச்சனைசெய் தானைமுகத்தானை
அனுதினம் தொழுதிட்டே
மெருகுகுலையா மென்னுளமாரப்
பொன்னூசல் ஆடாமோ.

உப்புக்குள முறைவிநாயகன்
பொற்பதம் போற்றிடுவோம்
ஒப்பிலாமணி தப்பெலாம் பொறுத்
தருளுநாயகன் தாள்பணிவோம்
செப்பமாய்வினை செய்துசீர்பெருக
செழுங்கருணை செழித்தோங்க
எப்போதுமிணைப் பாதமலர் பாடிப்
பொன்னூசல் ஆடாமோ.

செந்நெலும் செங்கரும்பொடு
மஞ்சளிஞ்சி விஞ்சிடவே
பன்னெடும் பனைதெங்கொடு
பயிர்பச்சை தழைத்திடவே
மின்னொடு முகில்முழங்கி
நன்னிலம்செழிக்க மழைபெய்திட
அன்பொடு பாதமெண்ணிப்
பொன்னூசல் ஆடாமோ.

மங்கையர்நாம் மாத்தமிழ்பேணி
மங்காத சைவம்வாழ
பங்கமெதுவும் வாராவண்ணம்
பாதுகாப்புத் தருமிறைவன்
செங்கமலப்பா தம்பணிந்தே
சிந்தனை சொல்செயலாலே
எங்குமுறைவி நாயகனைப்பாடிப்
பொன்னூசல் ஆடாமோ.

JAFFNA

## அபயம் தந்த அருளன்னை

காட்டின் நடுவே அமைந்திட்ட
கவின்மிகு கோயில் தனைநாடி
வாட்டும் இடரும் வேதனையும்
வஞ்சப் புலனின் சோதனையும்
சூட்டும் முள்நிறை முடியதுபோல்
சுமையாய் தலையை நெரித்திடவே
பாட்டுப் பாடி அகத்தினிலே
பரிவுடை அன்னையை வேண்டிநின்றேன்.

கண்ணைப் பறிக்கும் மின்னலொளி
கடுகதி தன்னில் பரவியெங்கும்
மண்ணும் விண்ணும் வியாபித்து
மாண்புடை அருளொளி யாயிலங்க
தண்ணளி மிக்க தாய்சக்தி
தளிருடல் பச்சைப் பட்டாடை
வண்ண ஒளியாய் ஒளிர்ந்திடவே
வனப்புடை கையில் திரிசூலம்.

தலையில் பொன்முடி ஒளிவீச
தாயவள் கண்கள் அருள்பொழிய
கலையில் வல்ல கவிவாணர்
கற்பனைக் கெட்டா அன்னையென்றன்
அலையும் உள்ள நிலையுணர்ந்து
அடியேன் முன்னே வந்துநின்றே
உலையாய் பொங்கி உலையாதே
உறுதி கொள்வாய் மகனே நீ.



அஞ்சேல் என்றே கைகாட்டி
அபயம் தந்த அருளன்னை
நெஞ்சில் புகுந்து நின்றிட்டாள்
நிலைகுலையாத திண்மை பெற
வஞ்சம் மாள வழிகாட்டி
வருங்கா லத்துக் கொளியூட்டி
செஞ்சொற் பாவால் அவளருளை
சிந்தை குளிர யான்பாட.

அன்பை அருளைத் தந்திடவே
அன்னை கனவில் தோன்றிநின்ருள்
என்பும் அன்பால் நைந்துருக
எழிலார் தாயின் திருவடியை
பன்னிப் பன்னிப் பாடிநிதம்
பண்பால் உள்ளம் உயர்ந்திடவே
அன்னை அருட்கார் மேகமதாய்
அகத்தில் அருளைப் பொழிகின்ருள்.

சான்றோர்

# வித்தகன் வீரன் விரிமனத்தான்

கந்த முருகேசன் காந்தக் கவர்ச்சியினால்
சிந்தையினை ஈர்த்திட்டான் செந்தமிழ் கொண் (டு) — அந்தமிலா
ஆனந்தம் பெற்றிடவே அன்பாய் அறிவுணர்வை
ஊனுருக ஈந்தான் உவந்து.

வியந்தே பலரும் புழுங்கிடவும்
வீங்கிய செல்வம் பெற்றோரும்
உயர்ந்த மாடி உப்பரிகை
உணவும் உடைகள் பிறபலவும்
பயந்த பலனை அனுபவித்தே
பாரில் களித்து வாழ்ந்தாலும்
அயர்ந்த மீளாத் தூக்கமெனும்
அவனியை மறந்த சாவின்பின்.

ஆல மரத்தின் விதைபலவும்
ஆலாய்த் தழைக்கா தழிதல்போல்
காலச் சக்கர வேகமதில்
காசினி அவரை மறந்துவிடும்
நூலைக் கற்று நுண்ணுணர்வால்
நுகர்ந்த நயத்தை மற்றவர்க்கும்
பாலைப் பொழியும் பசுவைப் போல்
பரிந்தே ஈயும் உயர்சான்றோன்.

ஆயிரம் விதையில் ஒரு விதையாய்
அழகாய்த் தழைத்தே வளர்ந்திட்டே
காய்கனி நல்கும் கற்பகமாய்
கற்றவர் தங்கும் நிழலாவான்
வாய்மொழி பகர்ந்தே வழிவகுப்பான்
வையகம் உய்திடச் சிந்திப்பான்
நோயதில் வெந்திடும் சேய்க்காக
நொந்திடும் தாய்போல் உருகிடுவான்.

அத்தகைச் சான்ருேன் எமைப் பிரிந்தான்
அவனுறை உள்ளம் துன்பத்தால்
மத்தினில் மோதிச் சிதறிவிழும்
மதுரத் தயிரென மயங்குதந்தோ
வித்தகன் வீரன் விரிமனத்தான்
விண்வெளி விளக்காய் விரிகடலாய்
புத்தக உலகில் ஒளிர்ந்துநின்ருன்
பொருள்பல விளங்கும் பொன்னுனன்.

செந்தமிழ் என்னும் நாவுடையோன்
சீரிய கொள்கையாம் நெஞ்சுடையோன்
பந்தமும் பாசமும் அகற்றிவிட்டே
பைந்தமிழ் அன்னையைப் பற்றிநின்ருன்
சந்ததம் சிந்தனைச் சிற்பியவன்
சாற்றினுன் உயர்ந்த பகுத்தறிவை
சந்தனக் காடாம் அவனுறைந்த
* ''தமிழகம்'' சென்ருேர் மணம்பெற்ருர்.

உள்ளத் தனைய(து) உயர்வென்று
வள்ளுவன் சொன்ன வாருக
துள்ளும் இளமை கொண்டவரும்
துடியிடை துவளும் நங்கையரும்
தள்ளா வயது முதியோரும்
தவழ்ந்திடும் கொஞ்சும் மதலைகளும்
அள்ளிப் பருகிடும் அமுதமதாய்
அன்னுர் உள்ளம் ஒளிர்ந்ததுவே.

துணிவும் தெளிவும் கனிவும் குழைத்த
பணிவுள்ளம் கொண்டவுயர் பாரி - மணிமணியாய்
அள்ளிக் கொடுத்தான் அழகுதமிழ் ஆழ்கருத்தை
உள்ளம் உருக உயர்ந்து.

* ''தமிழகம்'' என்பது புலவர் பெருந்தகை வாழ்ந்த இல்லத்தின் பெயர்.



## கந்த முருகேசனுர் கவின் தமிழ்க் காவலர்

''தினகரன் செய்தி
தேனென இனித்தது
மனம் மொழி மெய்யை
மாத் தமிழ் வாழ
தினந்தினம் ஈந்திடும்
தீந்தமிழ்ப் புலவர்
கந்த முருகேசனுர்
கவின்தமிழ்க் காவலர்
சிந்தனைப் பெண்ணவர்
சீரிய துணைவி
சந்ததம் செய்திடும்
தொண்டவர் மகவு
சொந்தமாய் அவரிடம்
உள்ளது தமிழே
நொந்தவர் தமக்காய்
வெந்திடும் நெஞ்சம்
செந்தமிழ்ப் புலவர்
துஞ்சிடும் மஞ்சம்
அன்னவர் மாண்பினை
அனைவரும் அறிந்திட
ஈழமெங் கணும்
விழாவெடுத் திடுதல்
எம்மருந் தமிழ்க்குச்
செய்திடும் தொண்டே''

[கந்த முருகேசனுரின் 60-ம் ஆண்டு நிறைவு விழாவை யொட்டி தினகரன் பத்திரிகையில் வெளிவந்த கவிதை]

# பூத்தான் நிதம் கவிதைப்பூ

வாழ்வின் பெரும்பகுதி வாடி வதங்கியுமே
சூளுரைத்துக் கல்வித்தீ மூட்டியவர் — நாளுந்தன்
மென்னுடல் துன்பமுற நன்முத்துப் பேணுகின்ற
வன்னுள்ளச் சிப்பிதனைப் போன்று.

தென்புலோலிக் காவினிலே தீந்தமிழாம் பொற்செடியில்
மின்னனைய பூவொன்று பூத்தொளிர்ந்து—தென்றலிலே
ஆடி அசைந்தே அறிவுமணம் நல்கியபோ(து)
ஓடியமன் சாய்த்தான் ஒளிந்து.

விண்ணுயர்ந்த சிந்தனையும் மாண்புமிகு நுண்மதியும்
பண்ணமைந்த பாட்டுமுடை பாவலன் - கண்ணிமைபோல்
காத்தான் கவின்தமிழாம் காவியச் சோலையதை
பூத்தான் நிதம்கவிதைப் பூ.

பட்டம் பெறவில்லை பட்டம் விழைந்தவர்க்கோ
இட்டமுடன் இன்கல்வி ஊட்டியவன் — பட்டமதை
வான வெளியினிலே வண்ணமுற உந்திவிட
ஆன உதவியீந்த நூல்.

ஊருக்கோர் ஊருணியாய் ஒண்தமிழின் தண்பொழிவாய்
பேரூக்கம் ஊட்டுமுயர் மாமருந்தாய் — ஆருக்கும்
அன்பை அறிவினிலே ஐம்புலன்கள் இன்பமுற
என்றும் வழங்கினான் எண்ணு.



# அண்ணா பத்து

முத்தமிழின் சத்தையெலாம் மூன்றெழுத்தில் தேக்கி வைத்தே
உத்தம பண்புக் குறைவிடமாம் — வித்தகனை
அண்ணா எனநாட்டார் அன்போ டழைத்திட்டே
கண்ணேபோல் காக்கின்றார் காண்.

தேனருவித் தீஞ்சுவையை தென்றலின் இங்கிதத்தை
வானுறை விண்மதியின் தண்ணொளியை—ஊனுறை
சிந்தை துணைகொண்டே சீராய் வழங்குகிறான்
செந்தமிழ்த் தாய்பெற்ற சேய்.

ஆங்கிலம் கற்றோன் அழகாய் எழுத்தினுள்ளே
பூங்கா எழிலைப் புகுத்தவல்லோன் — வீங்குபுகழ்
வேண்டாதே தாய்மொழியின் வேதனையைப் போக்
மாண்டிடவும் அஞ்சா மகன். [குதற்கு

வரட்சிகொண்ட மண்ணுக்கு வான்மழையைப் போல
மருட்சிகொண்டே ஏங்கிநின்ற நெஞ்சில் — புரட்சி செய்து
சொற்கொண்டல் பெய்தானே சுந்தர எண்ணமழை
பொற்கொடிகள் பூத்ததடா பூ.

நீண்ட நெடுநாளாய் நீணிலத்தில் நம்முன்னோர்
ஆண்ட பழங்கதையை ஐயமற — மாண்புடைய
சொல்லால் எடுத்துரைத்துச் சோர்வகற்றத் தெம்
வல்லுநனை என்றும் நீ வாழ்த்து. [பூட்டும்

எண்ணத் தெளிவு இதயக் கனிவோடு
வண்ணத் தமிழில் வலம்வரவே — அண்ணா
"திராவிட நாட்டினில்" தீட்டிடும் ஓவியத்தை
ஏற்கா இதயந்தான் ஏது?

வாழ்வின் பலதுறையில் மண்டிநின்ற மாசகற்ற
மாளும் தறுவாயில் மங்கிநின்ற — ஆழ்கலையாம்
நாடகத்துக் கூட்டியுயிர் நாட்டில் நிலவவிட்டான்
பீடு பெருகுதென்று பேசு.

மாற்றுரும் போற்ற வளர்ந்துவரும் கட்சிக்கே
ஊற்ருய் விளங்குகின்ற ஒப்பற்றேன்—சாற்றுகின்ற
சொல்லின் வழிநடக்க சூளுரைத்து நிற்கின்ருர்
பல்லட்சம் செம்மல்கள் பார்.

நாட்டின் துயர்துடைக்க நாளும் பணிபுரிவோன்
ஏட்டின் துணைகொண்டே ஈர்க்கவல்லோன் — மூட்டும்
விடுதலைத் தீபரவும் வீணர்கள் மாள
படுத்திருந்து பாராதே பாய்.

கண்யம் கடைப்பிடிக்கும் காளையரைக் கொண்டிலங்கும்
திண்மை மிகுந்த தி. மு. க. - பணிபுரிந்து
பாரில் திராவிடத்தைப் பெற்று மகிழ்வெய்த
வாரி வழங்குநீ வாழ்த்து.



# நாமம் என்றும் பீடுற வாழும்

ஒண்தமிழின் காவலனை ஊக்கமிகு சேவகனை
விண்ணுளக் காலன் களவெடுத்தான் - அண்ணுவே
செந்தமிழ் நங்கைமிக நைந்துருகி வாடுகிருள்
வெந்தழல் வேதனையில் வீழ்ந்து.

பாராண்ட பைந்தமிழாள் பன்னெடுங் காலமாய்
நீருகுத்த கண்ணுளாய் நீர்மைகுன்றி - சீரிழந்து
தன்னுரிமை தானிழந்து தத்தளித்த போதண்ணு
இன்னுயிரை யீந்தார் இனிது.

துணிவும் தெளிவும் கனிவும் மிகவே
பணிவன்பும் பூண்டே பணிசெய்து - அணியாக
வாழ்ந்தான் தமிழ்மக்கள் வாழ்ந்திடவே அண்ணலவன்
வீழ்ந்திட்டான் உள்ளமதை வென்று.

அன்பும் அருளும் அறனும் அழகுதமிழ்
மின்னும் உளங்கொண்டு மீட்டிட்டான் - இன்னலுற்ற
பைந்தமிழ் நாட்டினைப் பாரறிய வைத்திட்டான்
நைந்துருகி வாடுகிறேம் நாம்.

தொண்டும் துறவதுவும் தூயதமிழ்க் கென்றிட்டான்
உண்டுறங்கா தென்றும் உழைத்திட்டான் — கண்ணியமாய்
பண்பை அரசியலில் பாங்குறவே ஈந்திட்டான்
அண்ணல் அனவரதம் ஆய்ந்து.

சிந்தனைச் சிற்பி நாட்டின்
செயல்மிகு செம்மல் பாச
பந்தத்தை ஊட்டிப் பாரில்
பைந்தமிழ் மரபைப் பேணி
சந்ததம் தமிழர் வாழ
சகோதர உணர்வை நெஞ்சில்
செந்தமிழ் மொழியில் ஈந்த
சீரிய அண்ணு நாமம்

என்றுமே நிலைத்து வாழும்
எழில்மிகு தமிழும் வாழ
குன்றியே குறுகி வாழ்ந்தே
குறிதனை மறப்ப வர்க்கு
குன்றின்மே லிட்ட தீபம்
கொள்கையாம் ஒளியை நல்கும்
தென்தமிழ் வாழ நாளும்
தென்றலாய் தழுவி வீசும்.

விழுமிய உணர்ச்சி தன்னை
விறல்மிகு வேந்த னன்னான்
செழுந்தமிழ்த் தேனில் சேர்த்து
சீரிய கற்ப னைப்பால்
குழுமிய பல்லோர் கூட்டம்
குதூகலம் பெறவே நல்கி
எழுச்சியை ஈந்த ஏந்தல்
இன்தமிழ் மின்னல் வாழும்.

தான்மட்டும் வாழ எண்ணா
தலைமைசேர் சான்றோன் தன்பின்
வான்முட்டும் புகழை எய்தும்
வழித்தோன்றல் பலரை நல்கி
ஊனுயிர் வழங்கிச் சென்றான்
ஒண்தமிழ் வாழ என்றும்
நானிலம் வாழு மட்டும்
நாவலன் வாழ்வா னன்றோ!

பரிமளம் ஈந்த பூப்போல்
பாமணம் கமழ்ந்த நாவோன்
உரிமையாம் ஒளிவி ளக்கை
ஒளிர்ந்திடச் செய்யத் தன்னின்
அரியதாம் உயிரைத் தந்தே
அருந்தமிழ் காத்த அண்ணாப்
பெரியாரின் நாமம் என்றும்
பீடுற வாழும் பாரில்.



## மீள ஒளி உமிழ்ந்த பாட்டு

ஆழ்உள்ள அன்பதுவோ ஆன்றகவி மென்னுணர்வோ
வீழ்அருவி தன்னகத்தின் மின்னதுவோ - தாழ்வுற்று
நீள்துயிலில் கும்மிருட்டில் நின்ற தமிழர்க்கு
மீள ஒளியுமிழ்ந்த பாட்டு.

பாடினான் பாரதி பாடிப் பகுத்தறிவைத்
தேடினான் தேடித் தீப்பொறியாம் சொற்கொண்டு
சாடினான் சமூகக் கொடுமைதனைச் சலியாமல்
ஓடினான் ஒளிபரப்பும் பணியதனில் இரு[illegible]ண்டு
வாடினான் வாடி வழிவகுத்தான் உரி[illegible]போர்
ஆடினான் சேவைதனைப் பாடுவோம்நாம் சோதரரே.

நாடுஇனம் மொழியை எண்ணி
நலிவுற்ற நிலைக்கு வாடி
பாடிற்று நாவும் நல்ல
பைந்தமிழ்ச் சொல்லால் மேலும்
சூடற்றுக் கிடந்த ரத்தம்
சூட்டினைப் பெற்று நாட்டின்
பீடற்ற நிலையை எண்ண
பாட்டினில் மருந்தை ஈந்தான்.

பாட்டது புலவர்க் கன்றி
பாமரர்க் கில்லை யென்னும்
நாட்டினில் நிலவி வந்த
நஞ்சுமிழ் கொள்கைப் பாம்பை
வாட்டினான் பாட்டுப் பாடி
வகைகெட்ட பாம்பே ஓட
ஊட்டினான் உணர்வை மக்கள்
உள்ளத்தில் நிலைத்து வாழ.

நிலைகெட நினைப்புக் கெட்டு
நலிவினை அடைந்து நின்ற
அலைகடல் ஆண்ட நம்மை
அணைத்திட்ட கபோதிக் கொள்கை
கலைகளை உருக்கு லைக்க
கவின்தமிழ் நைந்த செய்தி
அலையலை யாகப் பாடி
அள்ளியே தந்தான் பாட்டில்.

இலக்கிய வானில் என்றும்
உதய தாரகையாய் புத்தி
துலக்கிடும் கவிதை பாடி
திருப்பமாய் அமைந்தான் நாட்டின்
இலங்கிடும் கவிதைக் காவை
எழில்பெறச் செய்தான் அன்னுன்
இலக்கினை உயிராய்க் கொண்ட
எண்ணற்ற கவிஞர் தோன்ற.

எளிமையில் தூய்மை கண்டே
எழிலினைப் போற்றி வாழ்ந்த
அளிபொழி மரபு காத்தே
அழகிய கவிதை யாத்தான்
இழிமொழி இயம்பி ஞேரும்
ஏத்தியே போற்றும் வண்ணம்
மொழிவளம் துணையாய்க் கொண்டு
மாண்டிடா உணர்வைப் பெய்தான்.

கற்றவர் பலபே ருண்டு
கருதிடார் நாடு பற்றி
சொற்களைக் கொண்டு யாப்பு
சிறந்திடும் வண்ணம் பரட்டு
பற்பல வகையில் பாடி
பதிப்பிப்பார் நூல்கள் தம்மை
வெற்றுடல் உயிரே இல்லை
விறைப்புண்டு; சூடே இல்லை.



கோயிலைப் பாடிஞேர்க்கு
கோயிலை ஆக்கி வைத்த
நோயிலே உழன்று வாழும்
நொந்தவர் தம்மைக் காட்டி
ஆயிரம் பிரபந் தங்கள்
அரனுக்காய் பாடி ஞலும்
கோயில்தான் நிலைக்கு மோசொல்
கும்பிதான் வாடும் போது?

கேட்டனன் பாட்டு மூலம்
கிளர்ந்தது மக்கள் உள்ளம்
மீட்டினன் தொடர்ந்து நாளும்
மாண்புடை உணர்வாம் யாழை
நாட்டினன் நலங்கொழிக்கும்
நறியபல் கருத்துத் தம்மை
போட்டனன் விதையை அன்று
புதுமையாய் வளரு தின்று.

இந்தியச் சுதந்திரத்தின்
இணையில்லாச் சரித்திரத்தில்
சிந்தனை செய்து பாட்டால்
சீரிய கருத்தைப் பெய்து
வந்தனை செய்து மாற்ருன்
வழங்கிய எச்சில் ஏற்ற
நிந்தனைக் குரிய நாட்டை
நினைத்திடத் தூண்டி ஞனே.

உரிமையின் மாட்சி பற்றி
உள்ளத்தில் தெளிவை ஏற்ற
எரிநிகர் சொல்லைக் கொண்டே
எரித்திட்டான் மடமை தன்னை
சரிநிகர் சமானம் வேண்டும்
சகத்தினில் அடிமை வேண்டாம்
நரிக்குணப் பறங்கி எங்கள்
நாட்டையா ஆள்வ தென்ருன்.

கண்ணனும் குயிலும் அன்னன்
கவித்திறம் சொல்லக் கேட்டே
உண்டிடும் உலகம் மேலும்
உயர்ந்திடும் கவிதை வானில்
கொண்டிடும் ஆர்வம் அன்பு
கூத்திடும் மகிழ்ச்சி ஊற்றில்
விண்டிடும் கவிஞன் ஈந்த
வியத்தகு படைப்பை எல்லாம்.

## வல்லாளன் சொல்லாளன் வன்னியசிங்கம்

சிங்கங்கள் பலஉண்டு ஈழ மண்ணில்
சிறுநரியாய் அவைமாறி விட்டதுண்டு
பங்கத்தைச் செய்துதன் தாயை விற்று
பட்ட முதல் பவிசுதனைப் பெற்றதுண்டு
பொங்குநெஞ்சம் தனைக்கொண்டு தமிழர் மண்ணை
பொறுப்புடனே காத்திடவே நினைத்த துண்டா
சங்கத்தமிழ் தனைவிற்கத் தரகு பேசும்
தன்னலப் பேய்களுக்கோ பஞ்சமில்லை.

ஒல்லாந்தர் ஆட்சிதனை எதிர்த்து நின்றே
உரிமைக்காய் உயிரினையே ஈந்த வேந்தன்
பல்லிளித்துப் பகைவனது பாதம் தாங்கா
பண்பாளன் அடலேறு அஞ்சா நெஞ்சன்
புல்லர்தமைப் புறமுதுகிட் டோடச் செய்த
போர்வீரன் கயிலைவன் னியனைப் போன்ற
வல்லாளன் சொல்லாளன் வன்னிய சிங்கம்
வழங்கினன் உயிர்தனையே நாட்டிற்காக.



மன்னரும் திருமலையும் மாண்புமிக்க
மட்டுநகர் யாழ்நகரும் மற்றுமுள்ள
கன்னல்நிகர் தமிழ்பேசும் மக்கள் வாழும்
கலைதுலங்கும் இடமெல்லாம் ஓடிச் சென்றே
இன்னல்களை நீங்கிதமாய் தொண்டு செய்தே
ஏற்றினன் உளங்களிலே உரிமைத் தீயை
அன்னனின் அடிச்சுவட்டில் செம்மல் பல்லோர்
அன்னைத்தமிழ் காத்திடவே உறுதி பூண்டார்.

அலைமோதும் கடல்போல அல்ல லுற்று
அனவரதம் அஞ்சியஞ்சி சாவோர் என்றும்
மலைபோன்ற உறுதிதனைப் பெற்றே ஈழ
மண்ணதனில் மாத்தமிழைக் காக்க நாளும்
சிலையுருவில் நின்றேநமக் கார்வம் நல்க
செந்தமிழர் நாட்டுகின்றார் சிலையை ஈழம்
நிலையான தமிழரசைப் பெற்று வாழ
நித்தநிதம் செயலாற்றத் தூண்டி நிற்கும்.

## பாவேந்தன் பாரதிதாசன்

ஈரம் வீரம் குடிகொண்ட
இன்தமிழ்ப் புலவன் பாவேந்தன்
பாரதிதாசன் திருநாமம்
பைந்தமி ழோடு வாழ்ந்திடுமே
பேரம் பேசித் தமிழ் மொழியை
பிறர்க்கு விற்றிட முனைந்தோரை
கார மாகக் கடிந்துரைத்து
கவிதையில் உணர்வை ஈந்திட்டான்.

மொழிக்கு முதலிடம் தந்திட்ட
முத்தமிழ் வித்தகன் மூதறிஞன்
முழுமூச் சாக அயராது
மொழிவளம் பேண உழைத்திட்டான்
அழுக்கு நிறைந்த சமூகத்தை
அழகுற நன்கு செப்பனிட
பழுத்த செஞ்சொல் துணைகொண்டு
பாவால் நாளும் தொண்டு செய்தான்.

சாதி சமயம் துணைகொண்டு
சதியைச் செய்த சழக்கர்களை
நீதி நேர்மை அறம்பேணி
நேர்வழி காட்டி நிறைசொல்லால்
ஆதித் தமிழன் மரபுணர்த்தி
அறத்தின் மாண்பை இடித்துரைத்து
சோதித் தமிழில் பாடி வைத்தான்
தூங்கும் தமிழன் விழித்தெழவே.



தமிழக விடுதலை இயக்கத்தில்
தளபதி அண்ணா படைக்கலனாய்
அமிழ்தமிழ் கவிதைகள் படைத்திட்ட
ஆன்றோன் சான்றோன் அண்ணலவன்
உமிழும் பகைவெறி கண்டஞ்சா
உண்மைத் திண்மை உளம்கொண்டோன்
கமழும் தமிழ்க்காய் காலமெல்லாம்
கற்பூரம் போல் எரிந்திட்டான்.

அஞ்சா நெஞ்சம் கொண்டோனை
அழகு தமிழின் உறைவிடத்தை
பஞ்சம் பசியால் வாடிடினும்
பைந்தமிழ் காக்க முனைந்தோனை
துஞ்சும் நிலைதான் அடைந்தாலும்
தூய தமிழின் நினைவகலா
செஞ்சொற் கவிஞன் செந்தமிழர்
சிந்தையில் என்றும் ஒளிர்ந்திடுவான்.

# விடுதலைக் கவிதைகள்

## திருப்பள்ளியெழுச்சி

என்னரும் புதல்வ இன்னுமா உறக்கம்
எங்கணும் உரிமையாம் ஆதவன் ஒளியே
மின்னியே படர்ந்து மன்பதை மக்கள்
இதயமாம் கமலத்தை மலர்வித்தல் காணுய்
மன்னராம் பலரும் மணிமுடி யிழந்தே
மக்களாய் வாழ்ந்திடல் மகனேநீ பாராய்
கன்னலின் சாறும் கவின்தமிழ் மைந்தா
கடிதினில் பள்ளி யெழுந்தரு ளாயே.

## துடித்தெழுந்து செயலாற்றத் தூண்டினனே

குற்றுயிராய்த் தமிழன்னை எதிரிசெயல்
விளைவதனுல் ஏங்கி நிற்க
வற்றலிலாப் பாசமெழ வழக்குரைக்கும்
திறங்கொண்ட மூத்த சேயோன்
கற்றறிந்தும் நிலையுணரா நீள்துயிலில்
நெடுநாளாய் உறங்கி நின்ற
உற்றவர்தம் துயில்கலைய துடித்தெழுந்து
செயலாற்றத் தூண்டினனே!

ஆர்த்தெழுவீர் அடிமைவிலங் கொடித்திடவே
அணியணியாய்த் திரள்வீ ரென்று
போர்க்கொடியை உயர்த்திவிட்டார் உறுதிமிகு
தளபதியாம் நமது செல்வர்
கூர்த்தமதி படைத்தோரே! கொள்கைக்கோ
அறப்படையில் சேர்வோம் வாரீர்
பார்த்தவர்கள் உளம்நடுங்கி கால்பிடரி
தனிற்பட்டே ஓட! ஓட!!

அறம்விளைந்த நெஞ்சுண்டு மாற்றுரை
ஈர்க்குமுயர் சிந்தை யுண்டு
திறமிகுந்த செயலுண்டு தீனர்க்குதவு
தயையுண்டு தகுந்த நேரம்
மறத்தலறத் தன்னுரிமை தனைநாட்டும்
துணிபுமிக உண்டு மேலும்
இறக்குநிலை யடைந்தாலும் தந்நெறியில்
பிறழாத பெற்றி யுண்டு.

இத்தனையு மிலங்கிடுமோ ரிளஞாயி
றிலங்கைவாழ் தமிழர் பெற்றோ
மித்தரையில் இனமுய்ய மொழியோங்க
எழில்ததும்ப மற்று முள்ள
சத்துநிறை சுதந்திரங்கள் பெற்றுவாழச்
சலியாது ஒளியு மிழும்
உத்தமனை உயிர்போல ஓம்பிடுவோம்
ஒப்பற்ற இன்ப மோங்க!



# பைந்தமிழர் அறப்போரே வாகை சூடும்

அறவழியில் திறமையுடன் நிற்கும் செம்மல்
அஞ்சாமை அவன்பூண்ட கவச மன்றோ!
விறகாகி விடுதலையாம் வேள்வித் தீயில்
வெந்ததனல் தனைக்கண்டு பகைமை ஓடும்
மறங்கலங்கும் மதோன்மத்தர் நெஞ்சும் வேகும்
மக்கள்தமை மதியாத திமிரும் சாகும்
புறங்காட்டி இவையெல்லாம் ஓடி மாள
புதுப்பொலிவு தனைப்பெற்று உரிமை வாழும்.

சீலத்தால் உயர்ந்தநம் செல்வர் சேனை
சிரம்கொடுத்துச் செந்தமிழைக் காக்கும் போரில்
ஞாலத்தின் நன்மனதை நம்பால் ஈர்க்கும்
நற்காந்தம் அவர்நெஞ்சில் வாழும் வீரம்
வேல்கொண்ட இராணுவம்தான் சீறி னாலும்
விலாவொடிக்கும் பொலிஸ்படைதான் பாய்ந்த
போதும்
கோல்கொண்டோர் குறைமதியால் நெரித்த போதும்
கொண்டநெறி பிறழாது எங்கள் சேனை.

யாழ்நகரும் மட்டுநகர் மன்னார் மற்றும்
யௌவனத் திருமலையும் வவுனி யாவும்
சூழ்கின்ற வெம்பகையை எதிர்த்து வீழ்த்த
சூளுரைத்து நிற்கின்ற வீரர் கோட்டம்
பாழ்போகும் பகைவர்தம் எண்ணம் யாவும்
பைந்தமிழர் அறப்போரே வாகை சூடும்
"ஆள்வேன் நான்" எனக்கூறும் ஆணவமே
ஆள்வாய்நீ சுடுகாட்டை; தமிழை அல்ல.

மாடிதனில் வாழ்பவரும் இறங்கி வந்தே
மனம்விரும்பி அறப்போரில் சேருகின்ருர்
பாடிவீ டமைத்துவிட்டார் பண்பைக் காக்க
பாடிவிட்டார் பரணிதனை மரபைப் பேணி.
ஓடிஒளிந் திட்டோரும் வந்து விட்டார்
ஒண்தமிழின் பெற்றிதனை என்ன என்போம்!
கூடிவிட்டார் தமிழரின்று பிறந்த மண்ணில்
குவலயமே கண்குளிரப் பார்ப்பாய் நன்று.

இல்லறத்தின் மாண்புணர்ந்த அன்னை மாரும்
இன்கல்விக் கடல்வாழும் இளஞ் சிருரும்
கல்லறையில் படுப்பதற்கே சித்த மானுர்
கவின்தமிழைக் காக்குமுயர் எண்ணத் தோடு
வில்லிலிருந் தெழுந்துவிட்ட அம்பு போல
விரைந்துவிட்டார் தமிழர்கள் பகையை ஓட்ட
‘‘புல்லைத்தின்’’ எனச்சொன்ன லூயி மன்னன்
பொசுங்கினுன் ஆணவமே உணர வேண்டும்.

உணர்வுவெள்ளம் உள்ளத்தில் பொங்கிப் பாய
உற்ருரை உறவினரை மறந்து விட்டோம்
பணம்பதவி பட்டமெல்லாம் தூசு! தூசு!!
பாட்டுமதன் ஒலிபோலும் தமிழும் நாமும்
நிணந்தின்னும் நரிபோல அரசு மாறின்
நீணிலத்தில் உயிர்நீத்த சடல மாவோம்
கணமேனும் இனிநாங்கள் துஞ்ச மாட்டோம்
கவின்தமிழே நம்நாவில் திகழ வாழ்வோம்.



# விடுதலை வீரனே கேளாய்

கார்முகில் கண்டு கருமையென் றெண்ணிக்
கடிந்திடின் மாமழை பெயுமோ?
வேரது மண்ணுள் மறைந்துமே கிடந்து
வனப்பினை இழந்துமே போக
ஏரிலை என்றே ஏளனம் செய்தால்
எழில்சுவை தருமரம் ஏது?
பாரினில் பகட்டு பிணமன இருட்டு
பணியுளம் தீண்டுமோ விரட்டு.

தீதனில் குழவி தீய்ந்திடும் போது
தாயவள் தாவியே பாய்ந்து
பூதனைப் பறித்தே எடுத்திடல் போன்று
பேரெழில் மகவினைக் காப்பாள்
போதனை செய்வோர் பதறிடா ரென்றும்
பாவையின் ஆடைதான் விலக
சோதனை செய்து சொட்டைகள் சொல்லும்
சோதாக்கள் தமிழரின் கூற்றம்.

உடலெழில் குன்ற உவாந்தியால் நொந்து
இரண்டைந்து திங்களாய் வெந்து
கடகடன் ருடி கால்களும் பதற
காலனின் அடிஒலி கேட்டு
திடமதை இழக்காத் தாயவள் தியாகம்
தீஞ்சுவைக் குழந்தையாய்த் தோன்ற
விடமதை ஒத்த வேதனை மறப்பாள்
விடுதலை வீரனே கேளாய்.

நாட்டினில் இன்று நம்மரும் தாயாம்
நாவினில் திகழ்ந்திடும் மொழியை
கூட்டினை அழிக்க உயிர்தனைக் குடிக்கும்
காலனின் செயலது போன்ற
வாட்டிடும் எண்ணம் வஞ்சகர் நெஞ்சில்
வளருது செந்தழல் போல
நீட்டிடு வோம்நாம் மனமொழி மெய்கள்
நம்மிடை தமிழ்மொழி ஓங்க.

வீட்டினுள் புகுந்த பாம்பதை மாய்க்க
விரைந்துமே கழிகொண்டு தாக்க
பாட்டினில் கிடந்த பானைபோற் பொருட்கள்
பாம்பது நுழைந்ததன் விளைவாய்
போட்டடி தாங்கிப் பொரிப்பொரி யாகி
போகுதே என்செய்வோம் என்று
கேட்டிடும் மனிதர் கேலிக்கே உரியர்
கேட்டினைக் களைந்திட முனையார்.

தனிமொழிச் சட்டம் புகுந்திட்ட ஈழம்
தமிழர்க்குப் பாம்புகாண் மனையே
பனிமொழி பொழியும் பகைவர்கள் பேச்சு
பாம்பினை விரட்டிட உதவா
இனிநமக் கிங்கே உரிமைகள் வேண்டின்
எதையுமே இழக்கவே துணிவோம்
தனிஇனம் நாங்கள் தாசர்கள் ஆகோம்
தரணியில் தமிழராய் வாழ்வோம்.



# துள்ளிவரும் வேல்கண்டு துவளல் வெட்கம்

ஈழத்தின் எழுத்தாள நண்பனே நின்
எழுத்துக்குத் தமிழ்மொழிதான் மூச்சே என்றால்
கூழுக்குக் கொள்கையினை ஏலம் போடும்
கும்பலிலே நின்குரலேன் ஒலிக்க வேண்டும்
தாழிட்டுத் தமிழ்த்தாயின் இதயந் தன்னை
தருக்கர்கள் தத்தளிக்கச் செய்யும் நேரம்
ஏழடுக்கு மாடியிலே இருந்து கொண்டே
எழுதிநீ குவித்துத்தான் என்ன காண்பாய்.

கடலின்றேல் மழையில்லை, காலந் தேய்க்கும்
உடலின்றேல் உயிரில்லை உணர்வாய் நன்கு
நடஞ்செய்யும் தமிழ்நங்கை வாழ்வ தெங்கே?
நாம்தமிழர் திருவாயாம் அரங்கு தன்னில்
விடங்கொடுத்துத் தமிழினுயிர் அழிக்கும் வேளை
வீணனைப்போல் மூலையிலே குந்தி டாதே
புடம்போட்ட தங்கத்தைப் போல நீயும்
போர்க்களத்தில் மூழ்கியெழ வாராய் இன்றே.

உள்ளத்தின் உணர்வதனை வடித்துக் காட்டு
உணராதார் தமக்கதனைப் படித்துக் காட்டு
நள்ளிரவு வெளிச்சம்போல் துணையாய் நில்லு
நடுப்பகலில் பகல்வேடம் வேண்டாம் தள்ளு
துள்ளிவரும் வேல்கண்டு துவளல் வெட்கம்
துடித்தெழுந்து செயலாற்றத் துணிந்து வாராய்
பள்ளிகொண்டு பணிமறக்கும் கோழையாநீ
பணயமாய் உன்னுயிரைப் பரிந்தே ஈவாய்.

சிந்தையனு ஒவ்வொன்றும் செந்தமிழைக் காக்க
சிந்தட்டும் ரத்தத்தைச் சிலிர்க்கட்டும் மேனி
குந்தக்குடி சையின்றி வாழ்கின்ற ஏழை
குணமிருந்தும் பணமில்லா இளமைபொழி மங்கை
உந்தன் கதைகளிலே உயிர்பெற்று வாழ
ஓயாத சிந்தனை ஆழியிடை மூழ்கி
வெந்து வெடிக்கின்ற நெஞ்சமதிற் தாயின்
வேதனையைப் போக்குதற்கு வழிதன்னை ஆராய்.

தேன்பொழியும் வாசகப்பா தென்றலனை காப்பியங்கள்
ஊனுயிர் உய்திடவே ஓதுகுறள்—மேன்மைகொள்
சங்கப் பனுவல்கள் சாக்காட்டில் வெந்திடுமே
பங்கம் களையா விடின்.



# இளங்கவி கேளாய் கொஞ்சம்

முகிழ்போன்ற தனத்தால் நெஞ்சை
அகழ்கின்ருய் மகிழும் பூவே
கமழ்கின்ற கேசம் மேகம்
கன்னத்தில் தேங்கும் மோகம்
இமிழ்கடல் முத்துப் பல்லோ
இளம்பிறை வடிவோ நெற்றி
உமிழ்கின்ற வாயோ பத்மம்
உலவிடும் பூங்கா நீயே.

இவ்வண்ணம் காதல் பாடும்
இளங்கவி கேளாய் கொஞ்சம்
எவ்வண்ணம் கொண்ட பூவும்
எழிலினை இழந்து போகும்
தன்னெண்ணம் போன போக்கில்
தளிர்விட்டுத் தழைத்துப் பூத்த
பொன்வண்ணச் செடிவாழ் மண்ணை
பொசுக்கியே நெருப்பால் சுட்டால்.

இல்லந்தான் எரியும் வேளை
இதயத்தில் காதல் ஏது?
நில்லுந்தன் அழகை மொண்டு
நிறையின்பம் பெறவே என்று
கல்லுந்தான் கரைந்து போகும்
கதிதனில் நிற்கும் பெண்ணை
சொல்லம்பால் துளைத்தா லுந்தன்
சிந்தையில் குழப்ப மென்பாள்.

பிறந்துநாம் வளர்ந்த மண்ணை
பெற்றதாய் உதித்த மண்ணை
சிறந்தபல் பனுவல் ஈந்த
சீரிய மொழியாம் கண்ணை
இறந்துமே மறையும் வண்ணம்
இம்சைசெய் கொடுமைக் கூற்றம்
கிறுங்கியே ஓடிப் போகக்
கிளர்ச்சிசெய் பாட்டுப் பாடு!

நாட்டினைச் சூழும் கேட்டை
நாடுவாழ் மக்கள் தாக்க
நீட்டிடு உணர்வாம் வாளை
நிறைசொல்லுக் கவிதை யாத்து
கோட்டுயர் கொள்கை பேணிக்
குறிதனை மறவாப் பண்பு
பாட்டினைப் படிப்போர் நெஞ்சில்
பதிந்திடும் வண்ணம் பாடு!



# நாட்டிலே சுதந்திர விளக்கேற்றி வைப்பான்

பெற்றவளைக் காசநோய் பீடித்து விட்டால்
பேரெழிலைத் துறந்துவிட்டாய் பாவிநீ என்னும்
கற்றவர்க ளெண்ணிறந்தோர் வாழ்ந்து பயனென்ன?
கசிந்துருகாக் கல்நெஞ்சக் கூட்டமே தானே!
உற்றதுன்பம் போக்குதற் குரியவழி தேடா
துறுப்பழகி லாராய்ச்சி செய்கின்றார் வெட்கம்!
வற்றிஉலர் பெருவெளியாம் வாழ்கின்ற நாடு
வகைதெரியாத் தமிழ்மகனே விளம்புகின்றான் பாவம்!

என்னுடு எனதுமொழி என்னினம் என்றே
எடுத்தியம்பி உள்ளத்தி லுணர்ச்சி யலைபொங்க
முன்னேடும் பிள்ளைகளாய் விரைந்துமே வாரீர்
மூச்சடக்கிப் போர்க்கடலில் உரிமைமுத் தெடுப்போம்
பொன்னேடு வேய்ந்தஎழில் மாடங்கள் வேண்டின்
பொங்குவளங் கொழித்திடவே குருதிபாய்ச் சிடுவோம்
பன்னுடு களில்நடந்த உரிமைப்போர் யாவும்
புகட்டுகின்ற பாடத்தைப் படித்துணர்வோம் நன்கு.

பரவட்டும் உரிமைத்தீ பைந்தமிழர் நெஞ்சில்
பஸ்பமாய்ப் போகட்டும் பயங்கொள்ளித் தன்மை
விரவட்டும் தமிழ்ரத்தம் விசையில்லா உடலில்
விண்ணுயர வளரட்டும் தமிழ்காக்கு மார்வம்
சிரமுதலாய்க் காலீருய்ச் சீறிவரும் பகைக்கே
சித்தமுடன் பலிகொடுக்கச் செழுந்தமிழ ருள்ளம்
உரம்பெறட்டும் உயர்ந்தகுறிக் கோளடைவோம் ஒன்ருய்
ஒழிந்திடட்டும் நம்மிடையே தொடைநடுங்கிக் கூட்டம்.

மணற்பரப்பாம் வனுந்தரத்தை மணித்திரு நாடாய்
மனவலிமை துணைகொண்டு மிளிர்ந்திடச் செய்தார்
மணம்பொதிந்த பூப்போல மூளைவளம் கொண்ட
மாண்புடைய தம்மினமாம் யூதரினம் வாழ
கணக்கிலடங் காதேயவர் பட்டதுயர் பாரில்
கலைத்தவரின் உயிர்குடிக்க இட்லரும் துடித்தான்
பிணக்குவியல் தனைக்கண்டு பேதலிக்க வில்லை
பொறுத்திருந்து செயலாற்றிப் பொன்னுடு பெற்றூர்.

வெஞ்சிறையும் சாக்காடும் பஞ்சமுடன் பிணியும்
விடுதலைச் செம்மலுளத் திண்மைக்குத் தீனி
அஞ்சலவன் அறியான் கொஞ்சுமொழி கேளான்
அன்னைதமிழ் மொழியன்றிப் பிறிதொன்றும் எண்ணுன்
துஞ்சலவன் எதிரி துணிவன்னுன் தோழன்
துடித்தெழுவான் கொடுமைமிகக் கடிக்கின்ற போது
நஞ்சனைய பகைகண்டு கொஞ்சமும் அஞ்சான்.
நாட்டிலே சுதந்திர விளக்கேற்றி வைப்பான்.



# எழுதாக் கவிதை

எழுதாக் கவிதை ஒன்றுண்டாம்
இதயந் தனிலே அதுவாழும்
முழுமை பெற்ற அதனுருவம்
முற்றுய்க் கண்டோன் உலகிலிலை
வழுவைக் கண்டால் கடிந்திடுமே
மாண்புடைப் பொருளைப் போற்றிடுமே
கழுவில் ஏறும் கணமதிலும்
கருத்தில் குறிக்கோள் இருத்திடுமே.

காற்றின் வேகம் அதற்குண்டு
கனலாய் வேகும் தணலுண்டு
ஊற்றின் தண்மை அதனுடைமை
உவர்நீர் ஆழி அதனுள்ளம்
போற்றிப் புகழ்வோர் உரைகேட்டுப்
புளகாங் கிதத்தை அடையாதே
மாற்றுன் மாண்பை மதித்திடுமே
மறந்தும் அவனடி பணியாதே!

சிறுமை கண்டு சகிக்காது
செல்வ நிலைக்கோ ஏங்காது
பொறுமை பூண்டு கடமைதனை
பொறுப்பை யுணர்ந்து செய்திடுமே
வறுமைப் பிணியே பீடித்து
வருந்தி யுழலும் நிலைதனிலும்
திறமை ஆற்றல் செயல்கொண்டு
தீனர்க் குதவி மகிழ்ந்திடுமே!

கூடப் பிறந்தோன் அறியாமைக்
குழியில் வீழ்ந்து கிடக்கையிலே
நாடிச் சென்று நயமாக
நலிவைப் போக்கும் மொழிஈயும்
மூடி மறைக்கும் இழிசெயலை
மூர்க்க மாக எதிர்த்திடுமே
தேடிப் பிடித்தே உண்மைதனை
சீலம் வாழ நல்கிடுமே.

உழைப்பால் மனிதன் உயர்ந்திடவும்
உணவால் உடலை வளர்த்திடவும்
களைப்பால் சோர்ந்து கிடக்கையிலே
களிப்பைக் கலந்து கலைகளிலே
குழைத்தே அறிவில் கொடுத்திடுமே
குன்று முயற்சி ஓங்கிடவே
மழையாம் கருணை வெள்ளமதை
மக்கள் உளத்தில் பாய்ச்சிடுமே!

விழிப்பாய் இருக்கத் தூண்டிடுமே
வீணர் தம்மைச் சாடிடுமே
மொழிப்போர் மூண்டால் முழுமூச்சாய்
முழங்கிக் களத்தில் இறங்கிடுமே
பழிப்போர் சொல்லைக் கொள்ளாது
பரிவாய் அவரை உடனழைக்கும்
செழிப்பாய்ச் சமூகம் வாழ்ந்திடவே
சிந்தையில் ஒளிரும் உணர்வதுவே.



# பேசுகின்ற மொழிகாப்போம்
# உயிர் கொடுத்தேனும்

ஆயிரத்துத் தொளாயிரத் தறுபதுட னென்றில்
அரசாங்க அலுவலெல்லாம் சிங்களத்தி லென்றார்
சேயிழந்த தாயைப்போல் தவிக்கின்றார் அந்தோ!
சேவைதனை இதுகாறும் நல்கிவந்த தமிழர்
காய்ந்திடுமே கும்பியென்று கலங்கிடுவோ ரெல்லாம்
கடுகதியில் சிங்களத்தைக் கற்றிடவே முனைந்தால்
ஓய்ந்திடுமே ஒண்தமிழின் உயிர்நாடி அந்தோ!
ஒருநொடியில் இனமரபு ஒழிந்தழியு மிங்கே!

பலநூறும் ஆண்டுகளாய்ப் பல்லிளித்து நின்றே
பக்குவமாய் எசமானின் குற்றேவல் புரிந்தே
நிலபுலங்கள் பணங்காசு நிறையவே பெற்று
'நான் வாழ்வேன், நான் வாழ்வேன்', என்றுமே ஓதி
விலைமதிக்க முடியாத உரிமையை விற்றார்
விளைவறியா மூதாதை யெனப்படுவோர் முன்பு
கலைகலைய நிலைபெயர இனமொழியும் மெல்ல
களையிழந்து கொத்தடிமை நிலையுற்ற தந்தோ!

தம்தாயின் விலங்கொடிக்க மாற்றானை நம்பும்
தயவிரக்க மில்லாத தனயரா தமிழர்?
வெம்கொடுமை வறுமைதான் வந்துற்ற லென்ன?
வீற்றிருக்கும் பெரும்பதவி விலகினு லென்ன?
''உம்'' கூட்டி மாற்றானின் ஆணைதனை ஏற்றே
உயிரூட்டம் தந்தவளைச் சாகடிக்க மாட்டோம்
சிம்மங்கள் சிறுநரியின் தந்திரத்தைக் கண்டு
செயலற்றுக் கிடந்திடுதல் அறிவுடமை யல்ல.

சிங்களத்தைப் படித்தெழுதத் தெரிந்தவரும் இன்றே
சீர்தமிழைக் காப்பதற்குத் "தெரியாது" என்றே
இங்கிதமாய்ச் சிங்களத்தை எம்மிடையே புகுத்தும்
இதயமிலா அரசுக்கே உணர்த்திடவே வேண்டும்
மங்காத உரிமைத்தீ கொழுந்துவிட்டே எரிய
மனத்தினிலே சங்கற்பம் பூண்டிடுவோம் நன்று
'பொங்குகின்ற கடலனைய பகைஎதிர்த் தாலும்
பேசுகின்ற மொழிகாப்போம் உயிர்கொடுத்தேனும்'.

எழிற்பூங்கா போன்றஇனம் பூண்டோடு மாய
ஏகிவரும் சிங்களமாம் இளித்தபல் மந்தி
அளிபொழிய அறம்போற்றி வாழ்ந்தஇனம் நாங்கள்
ஆயினும்நாம் கழிஎடுப்போம் மந்திதனை விரட்ட
வழியட்டும் வியர்வைநம் நெற்றிதனில் என்றும்
பிழியட்டும் நம்நெஞ்சை மாற்றானின் கொள்கை
"ஒழியட்டும் தீமை" யெனச் செயல்தன்னில் இறங்கி
உலகோர்கள் மெச்சிடவே தமிழனை காப்போம்!

## பாடிடு கனன்று

வானைப் பார்த்து மதியைப் பார்த்து
வையம் களிக்கப் பாடும் புலவ
கூனைப் பார்த்துக் குருடைப் பார்த்து
கொள்கை யிழந்தோர் விழிக்கப் பாடு
தேனைச் சொரியும் மலரைப் பார்த்துத்
திகட்டாத் தமிழில் பாடும் புலவ
மானைப் பழித்த மாதர் இன்று
மானம் இழந்த நிலையைப் பாடு.



மீனைப் பார்த்து மிளிரும் அழகால்
மாதர் கண்ணைப் பாடும் புலவ
கோனைப் பெற்றுக் கொடியைப் பெற்றுக்
கோலை ஓச்சிக் குடிகள் வாழ
தானைத் தலைவர் படைகள் சூழ
தரணி ஆண்ட தமிழர் தம்மை
ஏனை உலக மக்கள் இன்று
இழிக்கும் நிலையை நினைந்து பாடு.

வாடி வீழும் மலரைப் பார்த்து
வாடி உள்ளம் வதங்கும் புலவ!
கூடி வாழ்ந்த தமிழர் இன்று
கூறு நூறாய்ப் பிரிந்து நிற்கும்
நாடி வீழ்ந்த நடுங்கும் நிலையில்
நாதியற்று நிற்போர் தமக்குப்
பாடிப் பாடி உணர்வை ஊட்டும்
பணியை உந்தன் அணியாய்ப் பூணு

ஈழப் பெருமண் சாலச் சிறக்க
இலவம் பஞ்சாய்ப் பட்ட பாட்டை
தாழப் புதைத்துத் தமிழர் பணியை
தருக்கர் மறைக்கும் சதியைப் பாடு
வேழம் பொருதி வெற்றி கண்ட
வேங்கை யன்ன தமிழர் மரபு
காழ்ப்புச் சிந்தை இழந்தே இன்று
கோழை யான நிலையைப் பாடு.

கல்விப் பெருமை மிகவும் உண்டு
கசிந்துள் ளுருகும் நிலைதான் இல்லை
"வெல்லல் வேண்டும்" என்பர் மக்கள்
வினையைச் செய்யத் தயங்கி நிற்பர்
தொல்லை வேண்டார் சுவர்க்கம் விழைவர்
துணிவை யிழந்தே பிதற்றித் திரியும்
புல்லர் தம்மின் போலி உணர்வை
பூண்டொடு பொசுக்கப் பாடிடு கனன்று.

## உயிரை உணர்வை உடலைத் தாரீர்

இளைஞரே வாரீர் இதயத்தைத் தாரீர்
இரண்டொரு நிமிடம் எண்ணி உருகுவீர்
இலங்கையில் நம்இனம் இடர்ப்படும் இத்தினம்
நலத்தினை நாடியே நாட்டுக் குழைத்திட
இலட்சோப லட்சம் இளைஞர் இருந்தும்
இலட்சியப் பற்று இதயத்தில் கொண்டோர்
எத்தனை பேரோ எண்ணியே பாரீர்
படித்துப் பட்டம் பெற்றவர் உண்டு
நடிப்பால் மக்களை ஏய்ப்பவர் உண்டு
மதத்தின் போர்வையில் மறைந்துமே நின்று
இதமாய் அரசியல் இயம்புவோர் உண்டு
உண்மை உணர்வும் உறுதியும் கொண்டு
கண்ணிமை போலக் கவினுறு இனத்தை
காத்திட நினைக்கும் கற்றவர் எத்தனை?
வித்தகர் என்போர் வீண்உரை பேசி
நத்திப் பிழைத்தே நகர்த்துவர் வாழ்வை
புத்தியைத் தீட்டார் பதவியை நாடுவர்
ஆராய்ச்சி செய்வர் ஆங்கிலந் தன்னில்
தேரார் தம்மொழி தீண்டவும் கூசுவர்
தலைவராம் என்ற தலைக்கிறுக் குண்டு
தாசராய் நிற்கும் தம்நிலை உணரார்
கலைகள் பயிலுவர் கனன்றுமே பேசுவர்
நிலைதனை உணரா நீசராய் இருப்பர்
விலைபேசி மொழியை விற்பவர் உண்டு



வலையில் சிக்கி வாழ்வை இழப்பர்
கூற்றமாம் இவர்கள் கொடுஞ்செயல் என்றும்
ஏற்றமாய் இருந்த எழில்இனந் தேய
ஏதுவாய் இருத்தலை எண்ணியே பார்த்து
மோதியே கொடுமையை மூர்க்கமாய் அழித்திடு
கலைந்த ஓவியம் கவின்தனைப் பெறவும்
குலைந்த கூந்தல் கோலம் பெறவும்
ஆவன செய்ய ஆவலாய் எழுவீர்
காலம் நம்மைக் காத்தே இராது
ஞாலம் தன்னில் நம் இனம் வாழ
உயிரை உணர்வை உடலைத் தாரீர்
உதிரங்கொட்டி உரிமையைப் பெறவே.

## உறையிட்ட வாளைப்போல உறங்கிடாதெழுதல் எப்போ

வெம்மை வெயிலின் விளைவாய்
    வயலில் காணும் பிளவாய்
கைம்மைக் கொடுமைக் கனலில்
    காயும் பெண்ணின் உளமாய்
அம்மைப் பெருநோய் விளைவாய்
    அங்கம் தாங்கும் குழியாய்
செம்மைத் தமிழர் வாழ்வு
    சீரை இழந்த தேனோ?

தம்மைத் தாமே மறந்து
தமிழைத் தீய்த்தோர் தயவில்
செம்பொன் தேடிக் குடும்பம்
சிறப்பாய் வாழ வைத்தார்
பொம்மை பெரிதென் றெண்ணி
பிள்ளைக் கனியைக் கொடுத்தார்
'சும்மா' தந்தார் என்றே
சுமையாம் விலங்கை ஏற்றார்.

காட்டைக் கழனி யாக்கி
கணக்கி லடங்கா வளப்பம்
நாட்டில் கொழித்துப் பெருக
நல்லோர் நாளும் முயன்று
வீட்டை விளங்கச் செய்யும்
வண்ண ஒளியை நல்கும்
கோட்டை உரிமை விளக்கை
காத்தல் கடமை யன்றோ.

வேறு

மாற்றான் அரசு மாணிக்கம்
மலையாய்க் குவித்துத் தந்தாலும்
காற்றில் பறக்கும் பதராக
கருதி அவற்றை நாடாதே
ஊற்று நீரை ஒதுக்கிநீ
உப்பங் கழியை ஏற்காதே
சோற்றுத் துருத்தி உடல்வாழ
சுதந்திர உணர்வை மாய்க்காதே.



அணியும் உடையில் மயங்காதே
அகத்தில் அழகைக் காண்பாயே
பணியைப் புரிவோன் உடல்தன்னில்
பாயும் நாற்ற வியர்வைதான்
மணியாய் முத்தாய் அணிகலனாய்
மாதர் உடலில் ஒளிர்கிறதே
திணித்த உணவால் உடல் வளரும்
செயலால் நினைவால் உயிர்வாழும்.

வேறு

அறிவுடன் அன்பும் பண்பும்
அடக்கமும் பணிவும் உள்ளப்
பொறுமையும் சிறுமை கண்டு
பொங்கலும் கொண்டு நாட்டில்
சிறையுற்ற நிலையில் வாடும்
செந்தமிழ்த் தாயை மீட்க
உறையிட்ட வாளைப் போல
உறங்கிடா தெழுதல் எப்போ.

## வளமிகு இனத்தைப் பேணிடுவோம்

கொடியும் முடியும் செங்கோலும்
கொற்றக் குடையும் உடைவாளும்
அடிபணி யாத ஆண்மையதும்
அணியாய்ப் பூண்டே அரசாண்டு
மிடியைப் பகையை விரட்டிடவே
வீர சுவர்க்கம் தனையடைந்தோர்
அடிமைக் குழியில் வீழ்ந்துழலும்
ஆண்மையற்ற தமிழர்களை.

நினைந்து நினைந்து புலம்புகிறார்
நீரைச் சொரிந்து வாளுகை
புனைந்து புனைந்து பாவாக
புலவோர் முன்பு புகழ்பூக்க
வனைந்த மரபும் வாழ்வொளியும்
வனப்பை யிழந்து பாழாக
நனைந்து நலிந்த உப்பே போல்
நாளும் கரைந்து போவதேன்.

அறிவுக் கூர்மை மிகப்பெற்றும்
அகத்தில் துணிவும் தெளிவதுவும்
குறிக்கோள் மறக்காக் கொள்கையதும்
கூம்பும் பதர்போல் கொண்டிலேயே
நெறியும் நீதி நேர்மையதும்
நீணில வாழ்வில் தழைத்திடவே
வெறிகொண் டுழைத்த வீரர்களை
வீணன் நீயேன் நினைக்கவில்லை.

வாழும் பூமி பறிபோகும்
வாயால் பேசும் மொழிமாயும்
தாழும் நிலையும்; தருக்கர்களின்
தாளைப் பணிந்து நீயுழல்வாய்
கூழும் உடையும் பிறபலவும்
கொள்கை விற்றுப் பெற்றிட்டால்
நாளும் வசையால் நீமாள்வாய்
நானிலம் காறி உமிழ்ந்திடுமே.

நாட்டை மொழியை நம்மினத்தை
நல்லோர் முன்பு பேணியதை
மீட்டல் செய்தே உளத்தினிலே
மீண்டும் உரிமை தனைப்பெறவே
ஊட்டிடு உணர்வை எல்லோர்க்கும்
உறங்கா தென்றும் உழைத்திட்டே
வாட்டிடும் வறுமை வந்திடினும்
வளம்மிக இனத்தைப் பேணிடுவோம்.



# சுதந்திரம் விரும்புவோர் வாரீர்! வாரீர்!!

முடிகொடியும் முத்தமிழும் மூன்றுபாலும்
மூவேந்தர் ஆட்சிதனில் திகழ்ந்தபோது
குடிகள்தமை நெறிதவறு தாண்டுநின்ற
கொற்றவனும் தமிழ்மறவன் கோட்டைதன்னை
இடிந்தநிலை தனில்கண்டால் இதயம் விம்மும்
இடர்தொடர இருள்சூழ இதயம் சோர
மடிகின்ற நிலையினிலே துஞ்சி வாடும்
மருள்கின்ற தமிழரெலாம் எழுச்சி கொள்வர்.

மாதோட்ட மன்னவனின் மாண்புக் கோட்டை
மண்மேடாய் இருந்திட்ட போது கிண்டிப்
பார்த்திட்டார் பழம்பொருட்கள் கிடைத்ததங்கே
பறைசாற்றப் பாராண்ட இனத்தின் மாண்பை
தூர்ந்துவிட்ட அகழிபல மைல்கள் நீளம்
துயர்நிறைந்த கைம்பெண்போல் கிடக்கு தங்கே
வேர்விட்டு விருட்சமதாய் நின்ற கொற்றம்
வீழ்ந்துவிட்ட காதைதனை விளக்குதங்கே.

தேவாரத் திருப்பதிகப் பெருமை பெற்ற
சீர்திருக்கே தீச்வரமும் திகழு தங்கே
நாவார உளமாரச் சிவனை வாழ்த்தும்
நற்றொண்டர் பலரங்கே வந்து போவர்
''நீவாராய்'' எனக்கூறிக் கூறு நிற்கும்
நிறையெழிலாம் ஏகாந்தச் சூழல் கண்டால்
''பாவாராய்'' என்றழைத்தே உள்ளம் பொங்க
பாவலராய்த் திகழ்ந்திடவே முனைவர் மக்கள்.

பலநதிகள் கடல்தனிலே கலத்தல் போல
பரிவுநிறை மடுமாதா கோயில் தன்னை
பலமதத்தைச் சார்ந்தபெரு மக்கள் கூட்டம்
பக்திநிறை மனதுடனே நாடிச் சென்று
நலம்பெறுமே மடுமாதா கருணை பெற்று
நாட்டினிலே சன்மார்க்கம் தழைத்தே ஓங்க
இலங்குகின்ற எழிற்சூழல் வாழும் மாதா
எல்லோர்க்கும் அன்புபொழி அருட்கார் மேகம்.

ஞாலத்தில் அறிவொளியைப் பரப்பி மக்கள்
நலம்பெறவே தொண்டாற்றி வாழ்ந்த சான்ருேன்
வாலறிவன் நபிகண்ட மார்க்கம் தன்னில்
வாழ்கின்ற முஸ்லிம்கள் கட்டி வைத்த
கோலமுடை மசூதியெனும் அல்லா கோயில்
கும்மிருட்டை ஓட்டுகின்ற விளக்கே போல
சீலமுடன் சகோதரத்வம் நிலைத்து வாழ
சீரொளியை உமிழ்ந்தவண்ணம் விளங்குதங்கே.

அலைகடலின் அடித்தளத்தில் உறங்கும் முத்தை
அணிகலனுய் அரிவையரின் மேனி ஏற்ற
நிலைகுலையா நெஞ்சுறுதி கொண்ட வீரர்
நீள்மூச்சை அடக்கிமிகு வெற்றி காண்பர்
புலாலுண்போர் ஆசைதனைத் தீர்க்க வல்ல
புதுப்புதுமீன் பிடித்திட்ட வலைஞர் கூட்டம்
விலைபேசும் ஒலிசென்று விண்ணை முட்ட
வியப்பதனுல் கடலலையும் கரையை நாடும்.

இத்தகைய சிறப்பெல்லாம் இலங்கும் மண்ணும்
ஏற்றமிகு மன்னுரில் இனத்தைச் சூழும்
கொத்தடிமை நிலையகற்றக் கொற்றம் காண
கூடுகின்ருர் மறக்குலத்தோர் ஆகஸ்ட் மாதம்
உத்தமனும் ஒப்பற்ற தந்தை செல்வர்
ஒண்தமிழின் காவலனும் உயர்ந்த செம்மல்
நத்துகின்ற அடிமைநிலை அகற்ற வந்த
நற்தலைவன் அறவழியில் செல்வோம் வாரீர்.

சூழ்ந்திடும் கொடுமைகள் ஓட ஓட
சூழ்ச்சிசெய் அரசது வாட வாட
ஆழ்ந்தநற் கருத்துகள் மின்னி மின்னி
அகத்தினில் சொல்மழை பெய்யப் பெய்ய
வீழ்ந்தவர் உளத்தினில் வீறு பொங்க
விடுதலை வீரர்கள் ஆட ஆட
சூளுரை தலைவர்கள் கூடு கின்ருர்
சுதந்திரம் விரும்புவோர் வாரீர் வாரீர்.



# கவிதை ஊற்று

வெதும்பியே நெஞ்சம் வீங்க
வேதனை தணலாய்த் தீய்க்க
ததும்பிநீ ஆடுகின்ருய்
தண்ணொளி ஊற்றுப் போல
பதுங்கிநீ என்னுள் மட்டும்
பரவச மடைய வேண்டாம்
ஒதுங்கிவா எழுத்துக் குள்ளே
உணர்விலார் உளத்தில் பாய.

அடிமையாம் வெயிலால் வெந்தே
அரசிழந் திழிவால் நொந்து
வெடிப்பினுல் பிளவு பட்டு
வியத்தகு செழிப்பே தீய
படிப்பினுல் பட்டம் பெற்றும்
பண்பிலாப் பாலை நெஞ்சில்
துடிப்பெழத் தண்மை சேரத்
தொடர்ந்துநீ பாய வேண்டும்.

புன்செய்யும் நன்செய் ஆகும்
பொலிவுடன் வலிவும் சேரும்
வன்எண்ணப் புல்லுச் சாகும்
வளம்மிகக் கருத்து நெல்லாம்
பொன்கொழித் துயிர்கள் உய்யும்
போர்முறை அறவே மாயும்
நின்மனம் இரங்கு மாஞல்
நினக்காநான் சொல்ல வேண்டும்.

பாய்ந்திடத் துணிந்தா யானல்
பாய்ச்சலைத் தடுப்பா ருண்டோ
ஓய்ந்திடாய் ஒதுங்கி நில்லாய்
ஒருமுகப் பட்டே பாய்வாய்
மாய்ந்தனர் மன்னர் பாரில்
நின்னையே மாய்க்க எண்ணி
காய்ந்தவர் தம்மைக் காக்கக்
களிநடம் புரிந்து வாராய்.

ஈழமாம் கழனி தன்னில்
இன்தமிழ்ப் பயிர்தான் வாடி
மாளத்தான் விடுவாயோ நின்
மனமென்ன மரத்தா போச்சு
வாழத்தான் வைப்பாய் உன்றன்
வழிவழி மரபைப் பேணி
ஊழையும் எதிர்த்து நிற்கும்
உன்திறன் அறியார் யாரே.

ஓடிநீ பாய்ந்து வாராய்
உணர்வெனும் கவிதை ஊற்றே
பாடிநீ பண்ணி சைத்தே
பரவுவாய் உள்ளந்தோறும்
நாடிநீ சென்ற நெஞ்சம்
நலம்பெறும் உயரும் மேலும்
தேடியே நின்னை நாடும்
தீஞ்சுவைக் கவிதை ஊற்றே.



# தண்ணருள் மண்ணே அன்னை

"சேலைக்குச் சரிகை யுண்டு
சிவந்தநின் னுடலில் மின்ன
சேலைப்போல் விழியை யீர்க்கும்
சீரிய நகைகள் உண்டு
மாலைச்செவ் வானம் போன்ற
மனங்கவர் அழகு கொண்ட
கோலம்பூண் மாடி வீடு
கூத்திட அரங்கு முண்டு.

இத்தனை மட்டு மல்ல
ஏவிட ஆளம் புண்டு
மெத்தவும் உண்டு யாவும்
மின்னனை உன்றன் பட்டு
மெத்தைக்கு மட்டு முன்றன்
மனம்விழை உரிமை இல்லை"
சித்தத்தில் தெளிந்த மாது
சீறுவாள் இதனைக் கேட்டு.

சோலையிற் சுகந்தப் பூவாய்
சுந்தரம் மிளிர வாழ்ந்தும்
சாலையின் மாட்டு வாய்க்குள்
சதிரிடச் சென்று ளுள்ளம்
ஓலமிட் டுளறிச் சாகும்
ஒட்டித்தான் உலர்ந்த போதும்
பாலைவாழ் கள்ளி போலப்
படர்ந்திட உரிமை வேண்டும்.

கள்ளிக்குப் பாலை சொர்க்கம்
கடித்திடத் துணியும் மாடும்
துள்ளித்தான் குதித்தே ஓட
துரத்திடும் முட்கள் உண்டு
வெள்ளம்போல் தண்ணீர் மாற்றான்
வீட்டினி லிருந்த போதும்
உள்ளத்தா லிணைந்த பாவை
உற்றவன் உவர்நீர் வேட்பாள்.

"மரகத மணிக்குன் றில்லை
மலைதவழ் முகிலு மில்லை
"சரசர" ஒலஞ் செய்யும்
சீதள அருவி யில்லை
கரவிலாக் களியால் நடஞ்செய்
கான்மயில் தானு மில்லை
இரவிலே இருள்தான் ஆளும்
எழிலிலா நாடு பாழே"

இப்படிப் பிறந்த மண்ணை
இழித்துரைத் தின்பங் காண்போர்
செப்படி வித்தைக் காரர்
சிந்தையில் தெளிவே அற்றோர்
எப்படி எழில ழிந்தும்
எலும்புரு வான போதும்
தப்புச்செய் சேயைத் தாங்கும்
தண்ணருள் மண்ணே அன்னை.



## இன்பத்தை வேண்டிநின்றே கிளியே இலக்கையே மறந்தாரடி

பண்டைப் பெருமை உண்டு
பார்புகழும் பண்பும் உண்டு
மண்ணைத்தான் காப்பதற்கு — கிளியே
மனமொத்து வருவாரோடீ.

சித்தர் பிறந்த மண்ணை
சிவஞானம் ஒளிர்ந்த மண்ணை
பக்தி பெருகும் மண்ணை — கிளியே
பக்தர்கள் காப்பாரோடீ.

வித்தை பலவும் கற்று
வியந் துலகு பேசும்வண்ணம்
மெத்தப் புகழுடைந் தோர் — கிளியே
மண்ணைத்தான் காப்பாரோடீ.

மொழி பலவும் கற்றுநல்ல
மூதறிவு பெற்று வாழும்
விழிப்புற்ற அறிஞர் தாமும் — கிளியே
விரைந்து மண்ணைக் காப்பாரோடீ.

மொழிப் பற்றுக் கொண்டுமக்கள்
விழிப்புற்றே இனத்தைப் பேணி
பழிப்பவர் வியக்கும் வண்ணம் — கிளியே
பணிதன்னைச் செய்வா ரோடீ.

அன்னியன் ஆண்ட காலம்
அவன்மொழியைக் கற்றுத் தேர்ந்து
சென்னியில் சூட்டிக் கொண்டார் — கிளியே
சொந்தத்தாய் மறந்தாரடீ.

ஆண்ட மொழியைக் கற்று
வேண்டும் தொழிலைப் பெற்றே
பூண்டார் பொன் விலங்கை — கிளியே
பூரித் திருந்தாரடீ.

தன்சொந்தப் பண்பறியாத்
தலைக்கிறுக்குக் கொண்டு நின்ருர்
இன்பத்தை வேண்டி நின்றே — கிளியே
இலக்கையே மறந்தாரடீ.

## ஊருது நின்றிடா தொண்தமிழி ஞர்வம்

ஆருக இரத்தமழை அலைமோதி ஓட
அங்கங்கள் ஒவ்வொன்றும் அரிபட்ட போதும்
சாருகச் சடலத்தைச் சக்கையாய்ப் பிழிந்தே
சாக்காட்டு நரிகட்கு விருந்தாக்கி ஞலும்
வேருகிப் போய்விடா தெம்நாட்டுப் பற்று
வேகத்தில் குன்ருதே செந்தமிழ்ப் பற்று
ஊருது நின்றிடா தொண்தமிழி ஞர்வம்
உயிரெங்கள் உடல்தன்னில் உறைந்திடு மட்டும்.

உணவில்லை எனக்கூறி ஒடுக்கியே பார்த்தாய்
உண்டிக்காய் வாழ்பவரா உன்னுணை ஏற்க
மணமில்லை எனவாழும் மங்கைநல் லாளும்
மனமொப்பி பொருட்காக விற்றிடாள் கற்பை
கணநேரச் சிற்றின்ப வேட்கையைத் தீர்க்க
கலைத்திடான் தன்மோன நிலைதன்னை யோகி
பிணமாகிப் பேரின்பத் தமிழ்காக்கும் நாங்கள்
உடலுணவை மறந்திட்டோம் உயிர்க்குணவு
[பெறவே



## வடுப்பட்ட தேகமே வீரன்வாழ் இல்லம்

வெள்ளென வானம் வெளுத்ததும் ஆதவன்
வீறுடன் எழுவதைத் தடுத்திட முடியுமோ
புள்ளினம் பொழுது புலர்ந்ததும் மகிழ்ச்சியால்
பண்ணெலி பகர்தலை மறித்திட இயலுமோ
கள்உறை மலரது காதலால் நெகிழ்ந்துமே
கணவனும் வண்டதை களிகொண்டே ஏற்பதை
மெள்ளவே தென்றலும் மாந்தளிர் அணங்கினை
மிகுந்திடு காதலால் அணைந்திட முனைவதை.

தடுத்துமே நிறுத்தத் துணிபவன் உண்டோ
தாரணி அன்னவன் செயலினை எள்ளும்
விடுபட்ட கணையின் வேகத்தை யொத்த
விடுதலைத் தாகம் கொண்டவர் தம்மை
சுடுகாட்டுக் கனுப்பினும் சோர்ந்திடா ரன்ருே
சுடர்விட்டுத் சுதந்திரத் தீமூண் டிடுமே
வடுப்பட்ட தேகமே வீரன்வாழ் இல்லம்
வன்முறைக் கஞ்சிப் பணிந்திடு வாருே?

## விடுதலை வீரனய் விளங்கிடத் துணிந்திடு

சடுதியாய் வந்திடும் சாவுனை அணுக்கமுன்
விடுதலை வீரனய் விளங்கிடத் துணிந்திடு
கெடுமதி யாளர்கள் கேலிகள் பேசினும்
கொடுமைசெய் அரசது கூற்றமாய் வாட்டினும்
நடுநிலை நின்றுநீ நாட்டினில் நடப்பதை
நாளுமே நினைத்திடு நல்லதைச் செய்திடு
பெற்ற தாயவள் மறைந்துமே போயினும்
பிறந்த நாடது பெற்றவள் அல்லவோ
நீ ஒரு மனிதனய் நீடு வாழ்ந்தி ருந்தே
நிறையெழில் பருகி நின்இனம் பெருக்க
குறைவிலா அன்பினைக் கொட்டுவாள் நாடவள்
அன்னவள் நெஞ்சினில் அன்னியர் மிதித்திட
அடலேறு நீஏன் அமைதியாய் இருக்கிருய்
ஈர முள்ள நெஞ்சின னுயினும்
வீர மில்லாவிடின் விழல்தான் விளைந்திடும்
அன்னைமேல் அன்பு உண்டெனக் கூறின்
அன்னியன் கொட்டத்தை அடக்கிடப் புறப்படு
வெஞ்சமர் கண்டுநாம் அஞ்சிடும் மரபா
மிஞ்சிடும் பகையை வீழ்த்திட வாராய்
கொடுமையைக் கண்டு குமுருத உள்ளம்
சுடுகாட்டு அமைதியைப் பெற்றென்ன பயனே!



## மாளும் நிலையை மகிழ்வுடனே மாத்தமிழ் காக்க ஏற்போம் நாம்

எண்ணி யெண்ணி உருகியெழு
இதயம் ஒன்றை உடையவனே
விண்ணின் கீழே மண்ணின்மேல்
விரிகதிர் வெய்யோன் பரப்பிடவே
வண்ணப் பூக்கள் மலர்ந்திடவும்
வண்டின மவைமீ தொலித்திடவும்
கண்டே உள்ளம் களிபூத்து
கவிதை கனிந்தது தமிழ்ப் பாட்டில்.

தண்மதி விண்ணில் தவழ்ந்துவர
தாரகை கண்ணைச் சிமிட்டிடவே
கண்ணிமை மூடாக் காதலர்கள்
கலந்துரை யாடிக் கவிபாடி
உண்டனர் உள்ளக் கமலத்தில்
ஊறிய அன்புத் தேனடையை
விண்டனர் தமிழின் தொல்புகழை
விடுதலை பெற்று வாழ்ந்ததனுல்.

இன்றைய நிலையை நினைத்துப்பார்
ஏறினை நிகர்த்த தமிழ்மகனே
குன்றியே கொற்றம் இழந்ததமிழ்
கொடியுடன் வாழ்ந்த(து) அன்ருெருநாள்
நன்றியை மறந்த நயவஞ்சர்
நல்லவர் போலே நடித்திங்கே
கொன்றிடத் தமிழை முந்துகையில்
குதூகலித் தேனே அழைக்கின்ருய்.

பிறந்துநீ தவழ்ந்த மண்ணதனில்
பேசிடும் தாய்மொழிக் குரிமையுண்டா
இறந்தஉன் முந்தையர் இலங்கையரா
என்றுனைக் கேட்கிறார் திமிருடனே
உறங்கிநீ இல்லாள் உடனிருக்க
உதைத்திழுத் தெறிகிற பட்டாளம்
வெறிமிக இங்கே உலவுவதேன்
வீரர்கள் வாழ்ந்த மண்மீதில்.

பறங்கியும் மற்றும் அன்னியரும்
பறித்திட முன்பு நம்மண்ணை
விறல்மிகு வீரர் படைகொண்டே
வேந்தர்கள் ஆட்சி புரிந்தனரே
மறவர்கள் எனவே நாம்வாழ்ந்தோம்
மந்தையைப் போல வாழ்ந்தோமா
உறங்கிய நேரம் மண்கவரும்
உலுத்தரை விரட்டிட எழுந்திடுவாய்.

ஈழம் வாழும் வேழநிகர்
இன்தமிழ் பேசும் தமிழரெமை
கூளம் என்றா நினைத்திட்டு
கொளுத்திடும் சட்டம் இயற்றுகின்றார்
வாளும் வேலும் கையிலிலை
வைரம் பெற்றோம் நெஞ்சமதில்
மாளும் நிலையை மகிழ்வுடனே
மாத்தமிழ் காக்க ஏற்போம்நாம்



## நாடிடு நல்லதை நலத்தினைப் பெருக்கிட

ஆடுது செங்கதிர் அழகொளிர் கழனியில்
தேடுது புள்ளினம் தீனியை மகிழ்வொடு
நாடுது ஆவினம் நலம்கொழி புல்லினை
பாடுது குயிலினம் பசுமைகொள் வெளியினில்
கூடுது அஃறிணை குலத்தினைப் பெருக்கிட
வாடுது தன்னினம் வதைபடும் போதினில்.

வாடுது தமிழினம் ஈழத்தி லித்தினம்
மாளுது மடமையில் மரத்ததே உள்ளமும்
கூழது பெரிதெனக் கும்பிடு போடுது
காழது சாகுது கருத்துமே கலங்குது
சூழுது துயர்மிகத் துன்பமும் பெருகுது
சூளுரை செம்மலும் சுருளுது பணத்தினில்.

போடுது வாக்கினைப் பொறுப்பதை மறந்துமே
சாடுது உயர்வினை தாழ்வினை அணைத்திட
நாடுது தன்னலம் நாட்டினை மறந்துமே
பாடுது பாவலர் நாவதும் கயமையை
கூடுது கூட்டமும் கொள்கையைத் துறந்துமே
போடுது வாக்கினைத் தனிநபர் உயர்ந்திட.

பார்த்திடு அண்டையில் சோதரன் செயலினை
சேர்த்திடு வலிவினைச் செயல்தனைப் புரிந்திடு
வேர்க்கவே உழைத்திடு விலாவது ஒடிந்திட
போர்த்திறம் கொண்டநம் மூதுரை நினைந்திடு
ஆர்த்துநீ எழுந்திடு அயர்வினை விரட்டிடு
கூர்த்திறன் விளங்கிடக் கொள்கையை பரப்பிடு
கோதையர் நாட்டினை ஆளுதல் படிப்பினை!

நாட்டினைத் தாக்கிடும் நலிவினை நினைந்திடு
கேட்டினைக் களைந்திடு கொள்கையில் திளைத்திடு
மேட்டிமை பெரிதெனும் மயக்கத்தை விரட்டிடு
காட்டினில் விதைத்திடும் மடமையை ஒழித்திடு
ஊட்டிடு உணர்வினை வெட்டிடு கயமையை
நாட்டிடு கருத்தினை மக்கள்தம் உளத்தினில்.

தேடிடு உரிமைப் பயிர்விளை நலமெலாம்
வாடிடு(ம்) மக்கள் மடமைகள் ஓடவே
சாடிடு சழக்கர்தம் சதிதனை நாளுமே
நாடிடு நல்லதை நலத்தினைப் பெருக்கிட
கோடிடு இதுவென இனம்வளர் இலட்சியம்
ஆடிடு அதனைநீ அடைந்திடும் போதிலே!

## நாளுந்தன் நாட்டிற்கே உழைத்து வாழ்வான்

உணர்வொளியை உயிராகக் கொண்ட யாக்கை
உபத்திரவம் நிதம்தந்து வாட்டி னாலும்
உணவுபல செரித்துடல்தான் நலத்தை எய்த
உறுப்புக்கள் இயங்குதற்கு மறுத்த போதும்
மணங்கமழும் வாடாத மலரைப் போன்ற
மாண்புடைய கற்பனைப்பூ நுகர்ந்து வாழும்
வணங்கிஉல கேத்துகின்ற கவிஞ ரேறு
வாதைதரு உடல்தன்னில் வாழு கின்றான்.

வாழுகின்ற தன்நாடு வரட்சி கொண்டு
வளங்குன்றி எழில்குலைந்தே இருந்தபோதும்
சூழுகின்ற துன்பம்பல துளைத்த போதும்
சுதந்திரத்தின் அருமைதனை உணரும் வீரன்
ஆளுகின்ற உரிமைதனை இழந்த தாலே
அடிமைநிலை திருவழித் ததெனு உணர்ந்து
நாளுந்தன் நாட்டிற்கே உழைத்து வாழ்வான்
நல்லுணர்வு பாழுடலில் வாழ்தல் போல.



## போற்றுகின்றோம் நின் பணியை

தீந்தமிழின் பெட்டகமே தென்னகத்தின் திருவிளக்கே
திராவிட முன்னேற்றக் கழகமே
ஈந்தனையே உனதருமை ஏந்தல்களை கனிமொழியாம்
எந்தாயின் துயர்துடைக்க
மாந்திற்றே தமிழ்மைந்தர் பச்சைரத்தம் மந்திநிகர்
இந்திசர்க்கார் மதியிழந்து
காந்திமகான் பெயருக்கே களங்கத்தை ஏற்படுத்தும்
காங்கிரசின் கண்திறந்தாய்.

செம்மல் பலரும் திரண்டெழுந்தே
செந்தமிழ் காக்கப் புறப்பட்டார்
விம்மல் முனகல் கண்நனைக்க
வேதனை யுற்ற தமிழ் மண்ணில்
தம்முயிர் ரத்தம் சொரிந்திட்டார்
தணலில் வெந்தார் தமிழ்காக்க
வெம்பியே தேம்பும் தாய்மகிழ
வீரவணக்கம் செலுத்திடுவோம்!.

# குவலயமே காணுத கொள்கை வீரர்

குவலயமே காணுத கொள்கை வீரர்
குவிந்திடுவர் சென்னையிலே முப்பத் தொன்றில்
அவலநிலை போக்கிடவே அரிமா போன்று
அண்ணுவின் தலைமையிலே கூடி நிற்பர்
சவமாகிச் சந்ததியைக் காக்க எண்ணிச்
சாரையாய்ச் சென்றிடுவர் நாட்டோ ரெல்லாம்
அவமானம் துடைத்திடுவார் அகிலம் மெச்ச
ஆதிக்க இந்திமிக விரண்டே ஓடும்.

பலநூறும் ஆண்டுகளாய் உணர்வே யற்றுப்
பார்த்தோர்கள் பரிகசிக்கும் நிலையை நண்ணி
பலகூருய்த் தமிழரெனும் பண்பும் அற்றுப்
பாசிபடி நீர்நிலையா யிருந்த போது
நலமூறு கருத்துவிளை நெஞ்சங் கொண்டு
நறுநீரா யாக்கினரே பாசி போக்கி
கலையூறு காளைகளாம் கழகச் செல்வர்
கவின்தமிழே பூத்தொளிரும் அரசுக் காவில்.

நாகர்கள் அடைந்துவிட்டார் இலட்சியத்தை
நாம்தமிழர் ஏனேதான் தயங்கவேண்டும்
பாகர்கள் நாட்டுத்தேர் ஓட்டிச் செல்வர்
பவிசுமிகு நடுவரசாம் சீமான் ஏவ
போகநிலை பெரிதென்றே பாகர் எண்ணின்
போய்விடுமே தேர்உரிமை சீமான் கைக்குத்
தாகமிகு பற்றுடனே நாட்டை மீட்கத்
தாசர்கள் துணியாரே எழுவோம்]நாமே.



அருமைமிகு அண்ணுவும் சம்பத் தெங்கள்
அடலேறு நெடுஞ்செழியன் துணையும் கொண்டு
பெருமைமிகும் ஆதவன்போல் கிளம்பி விட்டார்
பண்பழிக்கும் இந்தியிருள் விலகி ஓடும்
ஒருமைப்பா டடைந்திடுவோம் உள்ளந் தன்னில்
இன்னுயிரைக் கொடுத்தேனும் தமிழைக் காக்கக்
கருமுகிலாம் இந்திதனை நுழைய விட்டாற்
கப்பிவிடுங் கும்மிருட்டுச் சூறை யாவோம்.

எழுந்துவிட்ட உணர்வதனை அடக்க வல்ல
எதேச்சாதி காரியிந்த வுலகில் இல்லை
கொழுந்துவிட்டே யெரிகின்ற உரிமைப் போரில்
கோடரிக் காம்புகளும் வெந்து போகும்
அழுந்திமிக அடிமைதனில் நீண்ட காலம்
அறிவுணர்வை யிழந்துவெறுங் கட்டை யானேம்
விழுந்துவிட்ட நாமெல்லாம் எழுந்து விட்டோம்
வீரமிகு வரலாற்றை எழுதி வைப்போம்.

அண்ணுவைச் சிறையினிலே பூட்டி வைத்தே
அடக்கிடலாம் போராட்டப் புயலை யென்று
விண்ணுணம் பேசுகின்ற காம ராசர்
வீணுக எண்ணிவிடின் விளைவு மற்று
மண்ணுண்ட மதோன்மத்தர் தமக்கு வாய்த்த
மறக்கவொண்ணுக் கதியைத்தான் அடையநேரும்
கண்ணுன தமிழ்காக்கும் உரிமைப் போரில்
கனல்கக்கும் எரிமலையாம் தமிழர் உள்ளம்.

போர்எங்கள் இனத்திற்குப் புதுமை யல்ல
பேடிகளா தமிழ்நாட்டில் வாழ்வோ ரெல்லாம்
தாருங்கள் இன்னுயிரை நாட்டிற்காகத்
தமிழ்நாட்டர் மனமுவந்து தமிழைக் காக்க
வாருங்கள் இனமரபு கண்ணி யத்தை
மதிப்பரிய உயிர்கொடுத்தே யெனினும் இன்றே
சேருங்கள் தமிழ்காக்கும் சேனை தன்னில்
செந்நீரைக் கொடுத்தேனும் தமிழைக் காப்போம்

தென்னுடு பொன்னுடு எங்கள் ஆவி
தித்திக்கும் தீந்தமிழே கண்ணின் பாவை
மின்னுடு மேகந்தான் மழையைப் பெய்யும்
மறத்தமிழர் வீரந்தான் அன்பைப் பெய்யும்
உன்னுேடு நானென்றே என்று கூறி
உருக்குலேக்கும் உள்ளத்தோ டுறவு கொள்ளும்
மன்னுதி மன்னராம் வடவர் தம்மை
மனம்நடுங்கச் செய்திடுவோம் அறப்போர் தன்னில்.

எட்டடிஆழ் மண்ணுக்குள் ளென்ருே ஓர்நாள்
யாருமே யறியாமல் புதைந்து போகும்
கட்டைகளாம் நாமிங்கே வாழ்வ தேனே?
கவின்தமிழை மாற்ருர்கள் சிதைக்கும் போது
வெட்டையிலே சிறகடித்துப் பறந்து பாடும்
வண்ணப்புள் வாழ்வதனை எண்ணி யடிமைக்
குட்டையிலே ஊறுகின்ற மட்டை வாழ்வை
குழிதோண்டிப் புதைத்திடுவோம் வாரீர்! வாரீர்!!

எருவிட்டு மலர்ச்செடியை வளர்த்தல் போல
எம்மரசாம் விளைவுபெற எருவே யாவோம்
கருவிட்டே எமைப்படைத்த தமிழாம் தாயைக்
கயவர்கள் துடிக்கின்ருர் கூறு போட
உருக்குலேந்தே உயிரழிந்து போனு லும்நாம்
உத்தமியாந் தமிழன்னை மானங் காப்போம்
மருப்பொடித்த தோளுண்டு மதியு முண்டு
மனங்கலங்கா மாண்புண்டு வாரீர்! வாரீர்!!



# சிந்தித்தது போதும் செயலில் இறங்கிடுவாய்

பண்ணேக் குழைத்து வெல்லச் சொல்லில் போர்ப்பரணி
பாடிக் களித்த தமிழ் மறவ
கண்ணே ஒத்தஉன்றன் கன்னித் தமிழ்மொழியின்
கற்பை அழித்திடவே ஓடி
மண்ணேக் கவரவரும் வஞ்சப் பகைமையினே
மங்காப் பற்றுடனே ஓட்ட
எண்ணித் துணிந்தெழுந்தே ஏந்தல் புறப்படுவாய்
இன்ப விழுப்புண்ணே ஏற்க.

நெஞ்சிற் கலந்துறையும் செஞ்சொற் தமிழ்வடிவு
கொஞ்சிக் குலவியுனேக் கூடி
மிஞ்சும் வெறியையுனக் கூட்டிக் களிப்பளித்து
மீளா இன்பத்திடை ஆழ்த்தி
மஞ்சம் உனக்களித்து மடியில் உயிர்வாழ
மனதை உவந்தளித்த மங்கை
வஞ்சப் பகைமையினுல் வாடி வதங்குகிருள்
வாளா திருத்தலுனக் கழகோ.

வெற்பை நிகர்த்தஎழில் மார்பில் பாய்ந்துநின்ற
வேலேக் களிற்றின்மேல் வீசி
உற்ற தலேவனவன் கண்ணில் நீர்பெருக
உயிரை யீந்துபோ ராடி
நற்ருய் உளம்பொங்க நாட்டில் பகைநீங்க
நல்லோர் வாயெல்லாம் வாழ்த்த
கற்ருேர் கவிபாடக் களத்தில் மாய்ந்தோரின்
கதையைத் தமிழ்மறவ எண்ணி.

முந்தி ஓடிவந்து மூர்க்கப் பகைவிரட்டு
முன்னோர் மரபுதனைப் பேணி
சிந்தித் ததுபோதும் செயலில் இறங்கிடுவாய்
சேரன் குலத்துதித்த செம்மல்
நிந்தித் தவர்கொட்டம் வெந்து கருகிடவே
நீவா களம் செல்வோம் எங்கள்
சொந்தத் தமிழ்ஈழ மண்ணில் தழைத்தோங்க
சோரா திரத்தமழை சொரிவோம்.

## மங்கையர் குலத்துக் கீனம்

உடைவாள் இடுப்பில் ஒளிர
உரிமைப் பெருந்தீ நெஞ்சில்
தடையைத் தகர்க்கும் படைபோல்
தழலாய் எரிய மறவன்
நடையைப் பயின்று செல்ல
நளின மங்கை கண்கள்
கடையில் தேங்கும் காதல்
கடலில் பார்க்க ஆழம்.

“விடைதா” என்பான் வீரன்
“விடையேன்” என்பாள் வனிதை
படையில் சேர்ந்தே நாட்டில்
பகையை விரட்ட வேண்டும்
குடையும் கொடியும் கொற்றம்
குடிகள் நமது சொத்து
உடையும் நிலையைக் கண்டும்
ஊமை போல இருப்பின்.



பகைதான் வெல்லும் நாளை
பாவை உனது கற்பு
புகைந்தே சாம்ப லாகும்
பூவை உன்றன் வதன
நகையைக் கண்டே அமிழ்த
நறிய தமிழில் பாடும்
வகையும் வழியும் மாள
வரண்ட பாலை யாவோம்.”

கொழுநன் உணர்வு கோதை
குவளைக் கண்ணில் மோத
அழுகை தவிர்த்தே அன்பன்
அகன்ற நெற்றித் திரையில்
முழுமதி போன்ற திலகம்
முடித்தே எழுதி மங்கை
செழுமை நாட்டில் தவழ
செந்தமிழ் ஏட்டில் துள்ள.

விடைதந் தனுப்பி நின்றாள்
வீரன் மனைவி அன்று
உடையால் மங்கை யானோர்
உள்ளம் சோர்ந்தே இன்று
“படையில் சேர வேண்டாம்
பகைவன் தாளைப் பணிந்தே
அடைவோம் பதவி பட்டம்
அழகு தமிழை மறந்தே.

சிங்களம் கற்போம் அன்ப!
சிந்தையில் குழப்பம் வேண்டாம்
எங்கள் உடலை வளர்ப்போம்
இனிய தமிழை விற்றே"
இங்ஙனம் கூறி மகளிர்
இழிசெயல் புரிதல் துரோகம்
மங்கையர் குலத்துக் கீனம்
மாத்தமிழ் உலகுக் கூனம்.

## மங்கையர் சபதம்

பைந்தமி ழன்னைக்குப் பாமாலை சூட்டிப்
பாவையர் நாங்கள் பணிந்தி டுவோம்
சுந்தர மேனியள் செந்தமிழ் நங்கையை
சந்ததம் பாடிப் பரவிடுவோம்.

பாரின் மொழிக்கெலாம் மூத்தவளாம்
பண்பை உயிரெனக் கொண்டவளாம்
தேரின் அவள்திறம் செப்பிடுவார்
செகத்தி லுறைந்திடும் மாந்தரெலாம்.

முப்பால் கொடுத்துமே ஞாலத்துக்கு
மூச்சை வழங்கினாள் எங்களன்னை
தப்புச்செய் தாரணி திருந்திடவே
தாயவள் ஈந்தனள் தொல்காப்பியம்.

காலில் சிலம்பது கொஞ்சிடவே
கையில் வளையல் குலுங்கிடவே
நூலில் சிறந்த மணிமேகலை
நுண்ணிடை தன்னில் ஒளிர்ந்திடவே.



ஆடினள் சங்கத்தின் முன்றிலிலே
ஆனந்தக் கவிஞர்கள் பாட்டிசைத்தே
ஓடினர் அவளண்டை சென்றிடவே
ஒண்டொடி அழகினில் சொக்கிநின்றார்.

கிரேக்கத்தில் ரோமத்தில் கீர்த்திபெற்றாள்
கிளியோ பெட்ராகளி பூத்திடவே
பரவிற்று அவள்புகழ் பாரெங்குமே
பண்டைத் தமிழர்கள் செயற்றிறனால்.

உயிரென்றால் நமக்கிங்கே வெல்லமல்ல
ஒண்தமிழ்ச் சமுதாய வயல்தனிலே
பயிரெலாம் பாங்குடன் செழித்திடவே
பாவையர் பசளையாய் மாய்ந்திடுவோம்.

அறத்தின் வழிநின்றால் அழிவில்லையே
அன்பைச் சொரிந்துமே வாழ்ந்திடுவோம்
மறம்வந்தே மண்டையைத் தாக்கினாலும்
மங்கையர் பொங்கி யெழுந்திடுவோம்.

## உரிமைப் பெண்

உணவருந்தா துடல்மெலிந்தே உருக்குலைய வில்லை
பணம்நிறையப் பையதனில் ஒலித்திடவே மேலாம்
குணமழியக் கொத்தடிமைக் கூலியாய் இருந்தே
பிணமனைய பதவிதனைப் பெற்றுநான் இருந்தேன்.

கணமதனில் காற்றெழுந்தே சூறையா தல்போல்
உணவருந்தும் வேளைபுழு நெளிந்திடு தல்போல
பிணமதனைப் பொசுக்களழும் பெருநெருப் புப்போல்
பணம்பதவி தாம்மறைய வந்ததோர் சட்டம்.

சிங்களமாம் தனிச்சட்டம் செய்நன்றி மறவேன்
மங்கியஎன் மனமதனில் மண்டிநின்ற மாசை
பொங்கியெழுந் துடனகற்றக் காரணமா யமைந்தே
எங்கும்நிறை நினையெண்ணத் தூண்டியது மதுவே.

உந்தனை யடைந்து வாழ
உறுதிநான் பூண்டு விட்டேன்
சிந்தனை செயல்கள் யாவும்
சீரிய வடிவாள் நின்னை
வந்தனை செய்து நித்தம்
வரவையே காத்து நிற்க
நிந்தனை செய்வார் போல
நீஎனை வெறுப்ப தேனோ.

உணவிலே விருப்ப மில்லை
உறங்கவோ மனமு மில்லை
மணமலர் அசைந்தே ஆடி
மனமுவந் தழைத்த போதும்
உணர்வ தெழவே இல்லை
உந்தனின் நினைவா லன்றோ!
குணவதி வாராய் இன்றே
கூடியே வாழ்வோம் ஒன்றாய்.

உவகையை உளத்தில் பாய்ச்சும்
உரிமையாம் பெண்ணே நின்னை
நவயுக மாந்தர் நண்ணி
நலம்பெற விழைவார் கண்ணே
கவலையே இல்லை என்பார்
கன்னியாம் நின்னைப் பெற்றோர்
புவனமே எழிலால் பொங்கப்
பூவையே வாராய் இங்கே.



தமிழினம் என்றே என்னைத்
தரணியோர் அழைக்கின் றார்கள்
இமிழ்கடல் ஆண்டேன் ஓர்நாள்
இமயத்தில் புலி பொறித்தேன்
கமழ்கலை பண்பு யாவும்
கவினுடன் திகழ வண்ணச்
சிமிழ்நிறை மணமே போலச்
சிந்தையில் உயர்ந்து வாழ்ந்தேன்.

காலமே பொறுமை கொண்டு
கலக்கியே என்னை வாட்ட
ஓலமிட் டெந்தன் மைந்தர்
உரிமையை யிழந்து நின்றார்
வால்பிடித் திழுக்கை ஏற்கும்
வன்நெஞ்ச நீசர் தம்மால்
பால்பொங்கி வழிந்த வாழ்க்கை
பாலையாய்ப் போன தன்றோ.

ஈழத்தில் எந்தன் மைந்தர்
இடர்ப்பட்டு வாடு கின்றார்
கூழத்தைத் தூற்றல் போலக்
கோல்கொண்டோர் தாக்கு கின்றார்
வேழத்தை ஒத்த மக்கள்
விறல்மிக எதிர்க்கின் றார்கள்
நாளத்தில் இரத்தம் பொங்க
நாளுமே பொருமு கின்றார்.

நின்எண்ணம் இன்றி நின்று
நீண்டநாள் துயருற் றோர்கள்
மின்எண்ணம் தோன்ற இன்று
மீண்டுமுன் தயவை நாடி
வன்எண்ணம் நீங்கி நல்ல
வகையுள்ள கருத்துக் கொண்டு
பொன்வண்ண மானே உந்தன்
பார்வைக்காய் ஏங்கு கின்றார்.

விடுதலைப் பூவில் வாழும்
மணமெனும் உரிமைப் பெண்ணே
நடுநிலை நின்று தேராய்
நல்லது செய்ய வாராய்
சுடுதலைக் கண்டு சோராச்
சுந்தர மக்கள் காணுய்
படுகின்ற மரந்தான் உய்யப்
பாய்ச்சிடு கருணை வெள்ளம்

## உள்ளந் தெளிய மொழி வேண்டும்

உருவில் திருவில் உயர்வில்லை
உள்ளந் தனிலே ஒளியின்றேல்
பருவம் நல்கும் வனப்பெல்லாம்
பகலவன் பார்த்த பனித்துளியாய்
அருகி அழிந்து போவதல்லால்
ஆக்கம் ஏதும் தருவதுண்டா
உருகி உணரும் உனதுள்ளம்
உயிரோ டென்றும் வளர்ந்திடுமே.

வலிவும் பொலிவும் பெற்றிடவே
வாதை செய்தே உடல்வளர்ப்பாய்
மெலியும் உன்றன் உளந்தனையே
மிடுக்காய் மிளிர வளர்க்காயே
புலியுடன் பொருதக் கற்றவனே
பொங்கிடும் எண்ணச் சுழலறியாய்
கிலியுடன் எங்கே ஓடுகிருய்
கிளர்ச்சியை நாட்டில் கண்டதுமே.



உள்ள முண்டு உணர்வுண்டு
உணர்ந்ததைச் சொல்ல மொழிவேண்டும்
கள்ள உள்ளம் படைத்தவரோ
கடிதினில் மொழியை அழித்திடவே
கொள்ளிக் கட்டை செருகுகின்ருர்
குலவித் துளிவிடம் கலந்திட்டே
அள்ளிப் பாலைத் தருகின்ருர்
அதைநீ பருகின் அழிந்தொழிவாய்.

உள்ளந் தெளிய மொழிவேண்டும்
உணர்வு சிறக்க மொழிவேண்டும்
துள்ளும் இளமைப் பருவமதில்
துடிப்புடன் படிக்கும் தாய்மொழிதான்
வள்ளுவர் நெறியில் நின்றிடவும்
வாழ்வினில் இன்பந் துய்த்திடவும்
உள்ளுந் தோறும் உணர்வளித்து
உயர்வை சிறப்பை நல்கிடுமே.

## பேசும் மொழியே பெருந் தெய்வம்

பேசும் மொழியே பெருந்தெய்வம்
பெற்ற தாயும் அவட்கீடோ
வீசும் தென்றல் வீணையொலி
விரியும் மலர்வாழ் பரிமளமும்
பாச பந்தப் பளிங்குருவாம்
பச்சைக் குழந்தை மழலையதும்
நேசம் தழைக்கத் தமிழர்க்கு
நீள்வாழ் வீயும் மொழிக்கீடோ.

சாதி பேத முடைநாற்றம்
சந்தனத் தமிழால் அகன்றுவிடும்
நோதல் உற்றே உட்பகையாம்
நோய்வாய்ப் பட்டோர் குணமடைய
மோதல் தவிர்க்க முழுமனதாய்
மொய்க்கும் வண்டாய் தமிழ்மலரில்
தாதை உண்டால் தமிழரெலாம்
தண்தேன் பெற்றுத் தழைத்திடுவர்.

தமிழ்வாழ் நெஞ்சம் உடையோராய்
தமிழரெல்லாம் திகழ்ந்திட்டால்
உமிழும் பகையும் ஒடுங்கிவிடும்
உற்றார் பிளவும் மறைந்திடவே
இகழ்ந்து தமிழை விற்கின்ற
இழிகுணம் கொண்டோர் செயலதுவும்
அமிழ்ந்தி அழிந்து போய்விடுமே
அகத்தில் தமிழ்த்தேன் பாய்ந்திட்டால்.

# குறுங்காவியங்கள்

## குறை ஈந்த நிறைவு

பொன்னொளிர் மேனி கொண்டு
மின்னொளி போ'ருள் பாராய்
வன்மையின் சாயல் இல்லை
மென்மையின் மெருகு உண்டு
கன்னலின் சாறு தானோ
கன்னிவாய் சிந்தும் பேச்சு
என்றிடும் இளைஞர் கூட்டம்
எழில்தனைக் கண்டு நாட்டம்
கொண்டுமே தெருவின் ஓரம்
வண்டுபோல் மொய்த்து நிற்பர்
அழகினை மொண்டு சென்று
அகத்தினைக் குளிரச் செய்தே
உணர்வினில் திளைத்து நின்றே
உயிர்க்கவி புனைய அல்ல
பொழில்தனில் கண்ட பூவைப்
பறித்துடன் முகர்ந்து விட்டு
கசக்கிடும் கயவர் போல
கன்னியைக் கவர நின்ருர்
நின்றஅவ் விளைஞர் தம்மில்
நேரிழை தன்னை நேரில்
கண்டுதன் உள்ளங் காட்டி
கடிமணம் புரிய எண்ணும்
காளையர் இல்லை இல்லை
கயவரின் கூட்டம் அன்ருே!
சாலையில் செல்லும் பெண்ணைச்
சடுதியாய் எடுத்தே ஏக
காமத்தின் தணலில் வேகும்
கடையர்தாம் நின்ருர் அங்கே
ஏரியில் தண்ணீர் மொண்டு

ஏந்திழை திரும்பும் வேளை
வீதியில் செல்வோ ரில்லை
வெண்ணிலா தனியே வந்தாள்
தண்மதி தன்னை மேகம்
தடுத்துமேல் போர்த்தல் போல
இருள்படர் உள்ளம் கொண்ட
இளைஞரும் சுற்றி நின்றார்
அஞ்சுகம் பதறி வீறிட்(டு)
அழுதுமே அரற்றி நின்றாள்
அலறிடும் சத்தம் கேட்டே
அவ்வழி வந்த வீரன்
அஞ்சவே வேண்டாம் ஈதோ
அருகினில் வந்தே விட்டேன்
என்றனன் எழுந்தே பாய்ந்தான்
ஏந்திழை தன்னை மீட்க
காமுகர் தமக்கு நன்றாய்க்
கரத்துடன் காலும் கொண்டு
செப்பமாய் வாட்டி விட்டான்
செருமுனை தன்னில் காளை
தாக்குதல் தன்னைத் தாங்கி
தாக்கவே முடியா நின்ற
தருக்கர்தாம் ஓடிச் சென்றார்
தப்பினேம் பிழைத்தோம் என்று.
ஆபத்தில் உதவி நின்ற
அருங்குண இளவல் தன்னை
கலங்கியே நின்ற நங்கை
கரங்களைக் கூப்பிக் கண்ணில்
நீர்வழிந் தோட நன்றி
நவின்றிட முனைந்து நின்றாள்
''அவதியில் சிக்கி நானும்
அலறிய போது வந்தே
உதவிய உங்கள் பண்பை



உளத்தினில் நிறுத்தி நன்றி
செலுத்திநான் இருப்பேன் இந்தச்
செகத்தினில் வாழு மட்டும்''
மங்கையின் வார்த்தை கேட்டு
மனமிக மகிழ்ச்சி கொள்ள
''ஆபத்தில் சிக்கி நிற்கும்
அபலைக்கு உதவி நல்கும்
செயலது புதுமை யல்ல
செகத்தினில் மனிதப் பண்பு''
காளை இவ்வாறு சொல்ல
கன்னியும் சொல்வாள் மேலே
''பண்பென்று தாங்கள் சொல்லும்
பதமதை உணரும் ஆற்றல்
கொண்டவர் இந்தப் பாரில்
கொஞ்சந்தான் உண்டு; நேரில்
கணைபட்ட மானைக் கண்டு
கசிந்திடும் பண்பு கொண்ட
மனிதரில் எத்தனை பேர்
மானது துன்பம் நீக்கும்
செயலிலே காட்டும் மேலாம்
சீரிய பண்பு கொண்டோர்
அத்தகை பண்பு கொண்ட
அருங்குண இளவல் தாங்கள்''.
''உந்தனை இம்சை செய்த
உலுத்தரை அறிவாயோ நீ?
எத்துணை துணிவு கொண்டு
எழிலுரு உன்னைத் தொட்டார்
வீணரை ஒடுக்க இங்கே
வீரர்தான் இல்லையோ சொல்''
''வீம்புதான் பேசும் ஈன
வீரர்கள் உண்டு இங்கே
எந்தனைப் பெற்ற அன்னை

எத்தனின் சொல்லைக் கேட்டு
வழுக்கியே வீழ்ந்து விட்டாள்
வாழ்வினில் பழியை ஏற்றாள்
வழிவழி பழியை ஏற்றி
அழித்திட எண்ணும் இந்த
சமூகத்தின் சொல்லைக் கேட்டு
சஞ்சலப் பட்டேன் நானும்
தாசியின் மகளே என்ற
தறுதலை எண்ணம் தூண்ட
ஏழ்மையில் உழன்று நாளும்
இடையறா வாடும் என்றன்
கற்பினை ஏலம் போட
கயவரும் துணிந்து விட்டார்
தாசிக்குப் பிறந்த பிள்ளை
தாலிக்கே உரியள் அல்ல
வேலியின் காவல் இல்லா
விளைந்திடும் பயிரைப் போல
பாவைநான் வாடு கின்றேன்
படர்ந்திடக் கொம்பும் இல்லை''
''வேதனை உன்னை மட்டும்
வெந்தழல் போல வாட்ட
மற்றவர் எல்லாம் பொங்கும்
மகிழ்ச்சியில் இல்லை பெண்ணே
ஏழையென் நிலையைக் கேட்டால்
இரங்குவாய் நீயும் சேர்ந்தே
அழகினில் குறைவு இல்லை
அந்தஸ்தில் பழுது இல்லை
படிப்பினில் பண்பு தன்னில்
பழகுவோர் மெச்சு கின்றார்
இத்தனை யிருந்து மென்ன
இழிசொல்லை ஏற்றி என்றன்
வாழ்வினைக் குலைத்தே என்னை



தாழ்வினில் அமிழ்த்த எண்ணும்
சமூகத்தின் சுடுசொல் வீச்சு
செயல்தனை இழக்கச் செய்யும்
என்தந்தை உழைப்பில் வல்லோன்
இடையறா துழைத்தார் அன்னார்
உடம்பினில் நரம்பு சோர்ந்தே
உறுதியை யிழந்து நின்ற
விளைவினால் வந்த நோயை
விகற்பமாய் எண்ணி வாழ்வைப்
பாழாக்கும் பெயரை வைத்து
பயித்தியம் என்று சொன்னார்
வியாதியின் பீதி நீங்கி
விடுதலை பெற்ற பின்பும்
பயித்தியம் என்ற சொல்லு
பசுமரத் தாணி போல
நிலைத்துமே நின்று என்றன்
நீள்நில வாழ்வைக் கொட்டும்
தேளினைப் போல நாளும்
திகிலினைத் தந்தே செல்லும்
வேதனைத் தீயில் என்றும்
வேகின்ற எனக்குப் பாரில்
கன்னியின் கழுத்தில் தாலி
கட்டிடும் உரிமை யில்லை
காரணம் என்ன என்றால்
கனன்றுமே புகலு கின்றார்
விசரனின் மகனே கேள்நீ
விசர்உனை அணைத்துக் கொள்ளும்
ஆதலால் உனக்கே இந்த
அவனியில் தாலி கட்டும்
அருகதை யில்லை யென்றே
அதட்டியே கூறு கின்றார்.
உள்ளத்தின் பண்பை ஓர்ந்தே
உளமதில் தோன்றும் நோயை

பழுதறக் கற்றுத் தேர்ந்து
பனுவலை ஆக்கும் நல்ல
அறிஞர்கள் சொல்லு கின்றார்
ஆராய்ச்சி செய்த பின்பு
பயித்தியம் என்ற நோயை
பரம்பரைச் சொத்து என்று
கூறுதற் கில்லை ஏது
தேறுவீர் ஓர்ந்து நன்றே*

வாழ்வினில் குறை இருப்பின்
விழிப்புடன் இருக்கச் செய்யும்
ஆதலால் குறையும் நல்ல
ஆக்கத்திற் குதவி யாகும்
குறையெனும் கோளில் நின்று
நிறைவினை அடையப் போகும்
இருவரும் சேர்ந்தே ஒன்றாய்
இருளினை ஓட்ட வாராய்
சதிபதி யாக உன்றன்
சம்மதம் வேண்டு கின்றேன்''
''குன்றின்மே லிட்ட தீபம்
குவலயம் தழைக்க என்றும்
உழைத்திடும் செம்மல் தன்னை
உளத்தினில் இருத்தி விட்டேன்
தடைஇனி இல்லை அன்ப
திருமணம் நாளை'' என்றாள்
சிப்பியின் வயிற்றில் முத்தும்
சேற்றினில் உதித்த பூவும்
ஒப்பிய உள்ளம் ஒன்றி
உலகினில் ஒளிர நின்றார்.

---

* **Dr. Karl Menninger Says,**

"At Present time we have no convincing evidence that insanity or any generally prevalent form of mental disease likely to result from insanity is transmitted by heredity"

—Quotation from "Psychologist" of March 1959.



## கடலிற் கலந்த கண்ணீர்.

ஊரெல்லாம் உறக்கத்தில் ஆழ்ந்திருக்க வானம்
உறங்காதே இடையிடையே கண்விழித்துப் பார்க்க
காரெல்லாம் கசிந்துருகிக் கனத்த மழை பெய்ய
கண்ணம்மா தன்கணவன் வரவுக்காய் ஏங்கி
போர்வைக்க நெற்கழனி சென்றுவிட்ட கொழுநன்
புறப்பட்டே இலம்நோக்கி வந்திடுவார் என்றே
நேர்நோக்காய் நெடுந்தெருவைப் பார்த்துமே நின்றாள்
நிமிர்ந்துநிற்க முடியாத குறுங்குடிசை தன்னில்.

காய்ச்சி வைத்த கஞ்சியது கலயத்தில் ஆறி
கடும்குளிரால் உறைந்திருக்க கண்கலங்கி நெஞ்சில்
பாய்ந்துபொங்கும் நினைவதனால் பரிதவித்தாள் பாரில்
பைந்தமிழர் மரபினிலே பிறந்துவிட்ட பாவை
பாய்பெட்டி தட்டுமுட்டு பரவியெங்கும் கிடக்க
பரபரப்பாய் அவற்றையெல்லாம் ஒழுங்காக்கி வைத்து
நோயாயும் மருந்தாயும் விளங்கவல்ல வஞ்சி
நொந்துருகி அத்தானை வரவேற்க நின்றாள்.

காத்தானின் உள்ளமதில் கண்ணம்மா மின்ன
கடும்மழையில் கும்மிருட்டில் ஓடோடி வந்தான்
பூத்தபொழில் தனைநாடிப் பறந்தோடும் வண்டாய்
பொற்கொடியாள் தன்மனைவி கண்ணம்மா நினைவாய்
வாத்தியம்போல் வயல்களிலே தவளையெலாம் முழங்க
வரம்பினிலே காத்தானும் கூத்தாடிச் சென்றான்
காத்திருக்கும் இல்லாளைக் களிப்படையச் செய்ய
கழனிதனில் தான்பட்ட பாட்டினையே மறந்து.

வாசலுக்குள் நுழைந்திட்டான் விரைந்துவந்த காத்தான்
வாஞ்சையுடன் காத்துநின்ற வனிதையவள் மகிழ
"நாசமழை" எனக்கூறி நனைந்துவிட்ட தலையை
நயமாகக் கோதிக்கொண்டே நங்கைதனைப் பார்த்தான்
பாசமழை தனில்நனைந்த பாவையவள் அங்கே
பக்குவமாய் அரைத்தெடுத்த சம்பலுடன் கஞ்சி
நேசமுடன் ஏந்திநின்றாள் நீள்விழியால் கொஞ்சி
நிலையிழந்த காத்தானும் கைநீட்டி யிருந்தான்.

சடுதியிலே ஊளையிடும் சத்தம்போல் ஏதோ
சாலையிலே நெடுந்தொலைவில் கேட்டிடவே காத்தான்
குடுகுடென்று ஓடிப்போய் வாசலண்டை நின்றே
குறிகுறிப்பாய் சாலைதனைப் பார்த்திட்ட போது
தடுபுடென்று மோட்டார்போல் உறுமுகின்ற சத்தம்
தடையின்றி அவன்நெஞ்சில் பீதிதனை எழுப்ப
கடகடென்றே ஆடிநின்ற காரிகையும் சோர
கரம்பிடித்தே அவளுக்குத் தேறுதலும் சொல்வான்.

"வீணாக வேதனையால் வேகாதே கண்ணே
வீரன்நான் உன்னருகில் இருக்கின்றேன் மானே"
"ஆணாக அரியாக நீரிருந்தும் என்ன
ஆயுதத்தைத் தாங்கிவரும் பட்டாளம் சீறிப்
பூணாகக் கைத்தடிக்கு எம்தோலைப் போர்த்தி
பூரித்தே ஆர்ப்பரிக்கும் ஊர்வாழும் மக்கள்
மாண்பிழந்த செய்திதான் தெரியாதா அத்தான்
மனம்மிகவும் படபடத்துக் கொள்கின்ற தந்தோ.

கைக்குழந்தை யுடனிருந்த தாய்மலரைக் கூட
கசக்கிமுகர்ந் தெறிந்துவிட்டார் பட்டாளத் தாட்கள்
நக்குதலைத் தொழிலாகக் கொண்டவெறி நாய்க்கு
செக்கென்ன சிவலிங்கம் தானென்ன அத்தான்
இக்கதிக்கு ஆளாகி இருப்பதிலும் பார்க்க
இறந்துயிரை மாய்த்திட்டால் எம்மானம் வாழும்
எக்கரைக்குப் போனாலும் எமைக்காப்பா ரில்லை
இந்துமா கடலுக்குள் சென்றிடுவோம் ஒன்றாய்.



பயம்வேண்டாம் கண்ணம்மா வாஉள்ளே என்று
படாரென்று கதவுக்குத் தாள்போட்டான் காத்தான்
வயற்காற்று விரைந்துவந்து விம்மிவிம்மி அழுது
வருகின்றார் படைவீரர் எனக்கூறிக் கதற
மயக்கமுறும் நிலைபெற்ற மங்கை நல்லாளை
மனம்தேற்றி உறுதியுடன் இருக்கும்படி சொன்னான்
புயற்காற்று வேகமதில் பட்டாள ஜீப்பும்
பூம்பூமென் றொலித்தவண்ணம் குடிசைமுன் நிற்க.

சோற்றுப்படை வீரர்சிலர் சுறுசுறுப்பாய்ச் சென்றே,
தட்டிநின்றார் கதவதனில் திறவென்று சீறி
காற்றுநுழை கதவிடுக்கில் கண்ணதனை வைத்து
காரிகையின் சேலையினை கண்டவுடன் மேலும்
பாற்சட்டி தனைக்கண்ட பூனையது போல
படபடென்று கதவைத்தட்டி உதைத்துத் தள்ளிவிட்டே
வேற்கூரைத் துவக்குகளை நெஞ்செதிரே நீட்டி
விறுவிறென்று நடவென்றார் காத்தானைப் பார்த்து.

"நெஞ்சறிய நான்குற்றம் செய்யவில்லைத் துரையே
நீங்களெனை வரச்சொல்லக் காரணம்தான் யாதோ?"
"பஞ்சையுனக் கேதுக்கடா காரணங்கள் மெல்லப்
பதுங்கியிங்கே வாழுகின்ற கள்ளத்தோணி நீயே."
"கொஞ்சம்தயை காட்டவேண்டும் மாதுரையே என்றன்
கூப்பனுண்டு நீண்டநாள் குடியுரிமை யுண்டு
புஞ்சைகளை நஞ்சைகளாய் புதுக்கிவைத்தே இங்கே
பலவாண்டாய் வாழுகின்ற ஏழைநாம் துரையே."

"கள்ளத்தோ ணியுனக்கு வாய்வேறு உண்டோ"
கனன்றெழுந்தே உதைத்துவிட்டார் பட்டாளவீரர்
"மெள்ளமெள்ள இங்குவந்தே குடியேறி எங்கள்
மென்னியிலே கைவைக்கப் பார்க்கிறாயே பறையா"
"வள்ளமென்றால் எதுவென்றே நானறியேன் துரையே
வாழுகின்ற இந்நாடே நானறிந்த நாடு.
உள்ளமதில் நன்றியுடன் உழைக்கின்றோம் ஐயா
ஊதியமே மிகச்சொற்பம் என்றாலும் துரையே"

கண்ணம்மா கதிகலங்கி அடுக்களையில் நின்றாள்
காமாந்தப் படைவீரர் கண்களிலே பட்டாள்
உண்ணாது பலநாளாய் கிடந்தபுலி போல
உன்மத்தர் அடுக்களைக்கு அதிவிரைவாய்ச் செல்முன்
புண்ணான மனம்கொண்ட காத்தானை நையப்
புடைத்துவிட்டே ஜீப்புக்குள் தூக்கியெறிந் திட்டார்
வண்ணானின் மாராப்புப் போய்விழுதல் போல
வண்டமிழின் வழித்தோன்றல் ஜீப்புக்குள் வீழ்ந்தான்

அலைபொங்கும் கடலானாள் அரிவை கண்ணம்மா
அரைநொடியில் அவள்நெஞ்சில் உதித்ததோர் எண்ணம்
சிலைபோல நான் இங்கே நிலையாக நின்றால்
சீரழிந்து போகுமென் சீலமுடன் கற்பு
குலைகுலையாய்க் 'கனிகண்ட மந்திகளை விரட்ட
கோதைநான் என்செய்வேன் குலப்பெருமை காக்க
மலையன்ன உறுதியுடன் கிணற்றில் வீழ்ந்திடுவேன்
மங்கையவள் துணிந்திட்டாள் சிட்டாகப் பறந்தாள்.

இரைமோப்பம் பிடித்தவெறி நாய்கள்பின் தொடர்ந்தே
இலேசாக அவள்கையைப் பற்றிடவே முனைந்தார்
விரைவாகச் சென்றவளும் வீழ்ந்திட்டாள் கிணற்றில்
வீட்டுவிளக் கணைந்திடவே திரும்பிவிட்டார் வெறியர்
உரைக்கவொண்ணாக் கொடுமைகளை இழைக்குமிப் படைக்கு
உற்சாக மூட்டுவதோ கோலோச்சும் கயமை
அரைக்கணத்தில் காத்தானை ஜீப்பினிலே கொண்டு
அடித்துதைத்து முகாமினில் காவலிலே வைத்தார்.

நாற்பதுபேர் இருப்பதற்கே திண்டாடும் அறையில்
நானூற்றை அடைத்திட்டார் கேட்பாரும் இல்லை
சாற்றமுடி யாதங்கே சதுராடும் கொடுமை
சனங்களல்ல விலங்குதானும் உயிர்வாழ்தல் அருமை
கூற்றம்தான் காவல்முகாம் உயிர்குடிக்கும் நன்றாய்
கோலோச்சி வாழ்ந்தஇனம் குவியுதங்கே பிணமாய்
வேற்றுமொழிக் காரரென்றால் வெறுப்புத்தான் இங்கே
விலாவொடித்தே அவருயிர்க்கே உலைவைக்கும் கயமை.



கண்ணம்மா காத்தான்கள் வடித்தகண்ணீர் ஆறாய்
கரைபுரண்டு கடல்தனிலே கலந்ததனால் அன்றோ
கண்ணதுவும் கடல்நீர்தான் பட்டவுடன் கலங்கும்
கலமோட்டிக் கடலாண்டார் அன்றொருநாள் நல்ல
வண்ணமலர்ச் சோலையதாய் விளங்கிநின்றார் பாரில்
வனாந்தரம்போல் வயிற்றுக்காய் நலிகின்றார் இன்று
எண்ணியெண்ணி இனத்திடர் களைந்திடவே நெஞ்சில்
எழுச்சிகொண்டே இறைதனையே வணங்கிடுவோம் நாளும்.

# பன்மணித்திரள்

## என்றன் உயிரே இன்தமிழ்த்தாயே *

என்றன் உயிரே இன்தமிழ்த் தாயே
உன்றன் கமலப் பாதம் பணிந்தேன்
இங்கே குழுமி யிருக்கின்ற தாய்மார்
சிங்க நோக்குச் செந்தமிழ்ப் பெரியோர்
சிறுர்கள் மற்றும் யாவர்க்கும் வணக்கம்
தெள்ளு தமிழில் தீஞ்சுவைக் குறளால்
உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் வகையில்
மன்பதை உயர்ந்த மாண்பினை உணர்ந்திட
அன்பும் அறிவும் இன்பமும் பெருகிட
"மனத்துக்கண் மாசில ஞதல் அனைத்தறன்"
எனக்கூறி எழிலுறு ஏற்றம் ஈந்த
சான்றேன் வள்ளுவன் நினைவாய் நாட்டோர்
தேன்சுவைக் குறளொலி தெருவெலாம் முழங்க
ஈராயிரமாண்டு நிறைவிழா வெடுத்தனர்
வீரமும் ஈரமும் வியத்தகு ஆற்றலும்
ஆரத் தழுவ ஆண்ட அரசர்கள்
மாண்பினை விளக்கும் மாதோட்ட நன்னகர்
ஈண்டிங்கு மாந்தையில் பண்டைநாள் ஒளிர்ந்தது
அத்தகை மாந்தையில் அழகுற விளங்கும்
தத்தையும் விலங்கும் தாண்டவ மயிலும்
உலவும் முல்லை மருதமும் நிறைந்த
பலப்பல இயற்கை வளமும் மலிந்த
அடம்பன் என்னும் ஆன்றேர் பதியில்
திடங்கொண் டுழைக்கும் தீந்தமிழ்க் காவலர்
எடுக்கின்ற விழாவில் எழில்சுவை ததும்ப.

தொடுத்திடும் கவிதை மாலை பொலியும்
அரங்கினை அமைக்க அழைத்தனர் கவிஞரை
சுரக்கும் அன்பால் சுந்தரத் தமிழ்சேர்
அரங்கத் தலைவராய் என்னை அழைத்தனர்
அன்னார்க்கு என்றன் நன்றி பலவே.

## வாணியின் வீணை

வானத்து மழையை மண்ணுள்
மனமுவந் தேற்றே தன்னுள்
பானமாய்ப் பதுக்கி வைத்தே
பயிர்மற்று முயிர்கட் கீவாள்
ஊனத்தை உருக்க வல்ல
உபாதையால் வாடி னாலும்
மோனத்தில் இருந்தே ஆன்மா
முகிழ்த்திட மூச்சை ஈவாள்.

ஊனத்து மழையைப் பெண்ணுள்
உவந்தினி தேற்றே ஞாலம்
மானத்தைப் பேணி வாழ
மறவரை மதியை ஈர்க்கும்
கானத்தைப் பொழிவோர் தம்மை
கலங்கரை விளக்காய் என்றும்
ஞானத்தை உமிழ்வோர் தம்மை
நானிலம் உய்ய ஈவாள்.

*(2. 6. 69 ல் மாந்தை - அடம்பனில் நடைபெற்ற வள்ளுவர் 2000 ஆண்டு நிறைவு விழாவில் இடம்பெற்ற கவிதை அரங்கிற்குத் தலைமை வகித்துப் பாடிய கவிதை)



கருத்தரித் திருக்கும் அன்னை
கலங்குதல் இல்லை மேலும்
உருக்கொடுத் துலகுக் கீவாள்
ஊன்துறந் துயிரே தானும்
மரித்திடும் நிலையை நண்ணி
வானினை அடைந்த போதும்
சிரிப்பினைச் சிந்திச் சாய்வாள்
சீருரு மதலை வாழ.

பெற்றவள் எங்கள் வாணி
பிறந்தமண் அவளின் வீணை
கற்பனை ஆறு போல
கலகல ஒலிசெய் தோட
பற்பல பொருள்கள் யாவும்
அறிவெனும் பொழிலில் வாழ
சொற்களாம் மலரால் பாவைச்
சூட்டியே துதிப்போம் நாங்கள்.

## அழகும் அருளும்

காடும் குன்றும் வயலும்
களித்துச் செழிப்பைப் பெறவே
ஓடும் அருவி ஓங்கி
ஒலிக்கும் இடத்தில் ஒயிலாய்
பாடும் பறவை, விலங்கு
பாம்புக் கூட்டம் பருக்
சூடும் மங்கை இல்லா
சுடரும் பூக்கள் மலரும்.

அங்கே முருகன் அமர்ந்தே
அழகும் மணமும் குணமும்
பொங்க பொலிவும் வலிவும்
பூரிப் புடனே திகழ
தங்கு தடையே யின்றி
தண்ணளி ஈவான் மாந்தர்
பங்கம் இன்றி வாழ்ந்து
பாரில் இன்பம் துய்க்க.

செல்லக் கதிர்கா மத்தில்
செவ்வேள் இயற்கைப் பொழிலில்
பல்கிப் பெருகும் வளத்தை
பாங்காய் வழங்கும் திறத்தை
அல்லல் தீர்க்க அங்கே
அருளை நாடிச் செல்வோர்
சொல்லிச் சொல்லி உருகி
சொக்கித் திளைப்பர் அழகில்,

இன்பம் பொங்கி வழியும்
இயற்கை அழகில் மூழ்கி
அன்பும் அருளும் அறமும்
அலைந்து வாடும் நெஞ்சில்
என்றும் ஊறி ஆறாய்
ஈழக் கழனி தன்னில்
நன்கு பாய வேண்டும்
நற்பயிர் ஆட்சி தோன்ற.



## பொங்கல்

காலைக் கதிரோன் விழிக்கின்றான்;
காவில் மலராள் சிரிக்கின்றாள்;
பாலைப் பொழியும் பசுமாட்டில்
பாவை பாலைக் கறக்கின்றான்.
வாலை நிமிர்த்திக் கன்றதுவும்
வாயை நீட்டிச் சென்றிடவே
கோலைக் காட்டி மிரட்டுகிறான்
கோதை யாளின் செல்வமகன்.

வயலில் விளைந்த செங்கதிரை
வாஞ்சை பொங்க அரிந்திட்டே
செயமாய் வாகை சூடிவிட்ட
செருமுனை மீண்ட வீரன்போல்
புயலாய் இல்லம் ஏகுகின்றான்
பூவை இல்லாள் களிபூத்தே
கயலாம் விழியால் வரவேற்க
காளை கதிரைக் கொடுக்கின்றான்.

குற்றிய நெல்லைப் புடைத்தெடுத்த
குருதியை யொத்த பச்சரிசி
வற்றிய வயிற்றின் வாட்டத்தை
வளத்தை ஊட்டி ஓட்டிடுமோர்
கற்றவர் ஏத்தும் அமிழ்தமதாய்
காரிகை கையிற் திகழ்ந்திடவே
பற்றுடன் பார்த்துப் பூரித்தான்
பாரைக் காக்கும் உழவனவன்.

மைந்தன் மனைவி மகிழ்வெய்த
மணியணி தந்தான் தலைவனவன்
நந்தா விளக்காய் மிளிர்ந்திட்டாள்
நாயகன் உள்ளம் பொங்கிடவே
பந்தம் பாசம் நிலைத்திடவே
பற்றுக் கோடாம் பாலனவன்
சிந்தை கவரும் பட்டாடை
சீராய்ப் புனைந்து நின்றிட்டான்.

கோலம் போட்ட முற்றத்தில்
குத்து விளக்கு ஒளியுமிழ
சோலை வாழ்ந்த மலர்ஒளிர
சுகந்தம் எங்கும் தவழ்ந்துவர
கோல மஞ்சள் இஞ்சியொடு
குதலை மொழியாம் கரும்போடு
சால இல்லம் சிறந்திடவே
சதிபதி பொங்கல் பொங்கினரே!

அமிழ்தம் பாலிற் பொங்கிற்று;
அகத்தில் அன்பு பொங்கிற்று;
தமிழ்மணம் எங்கும் பரவிற்று;
தாரணி பண்பில் ஊறிற்று;
இமிழ்கடல் பொங்கி ஏத்திற்று;
இதய மெல்லாம் வாழ்த்திற்று;
கமழ்கலை எல்லாம் பொங்கிற்று;
காணேன் அவற்றை இன்றிங்கே!



## உறுதியாய் இருந்திடு உண்மையை நாடிடு.

ஐம்புலனை உனது ஆணைக்குள் கொண்டுவா
அறிவினை அணைந்திடத் துடித்துநீ எழுந்திடு
துணிவைப் பெருக்கிடு துயரத்தை ஓட்டிடு
பணிவை அணிந்திடு பண்புடன் வாழ்ந்திடு
கணிதம் பயின்றிடு கலைகள் நுகர்ந்திடு
வாணிபம் செய்திடு வன்மையைப் பெருக்கிடு
மென்மையைப் பூண்டுமே அழகுடன் மிளிர்ந்திடு
தன்மையில் உயர்ந்திடு தயவுடன் வாழ்ந்திடு
அன்பினை ஆவலாய் என்றுமே வளர்த்திடு
ஆசையை ஆதரி பேராசையை விரட்டிடு
மொழிதனை ஆர்வமாய் நிதமுமே படித்திடு
முழுமைகொள் கருத்தினை மொண்டுநீ திளைத்திடு
உணர்வுடன் கூடியே உயர்ந்துமே பறந்திடு
உறுதியாய் இருந்திடு உண்மையை நாடிடு
உணர்வினில் கிளர்ந்தெழும் ஒளிதனை மடக்கியே
உயிர்க்கவி புனையவே உழைத்திடு கவிஞனே
நல்லதை அளித்திடு கெட்டதை அழித்திடு
சொல்தனைப் பெருக்கிடு சோர்விலா திருந்திடு
அழகினைப் பருகிடு ஆழமாய்க் கற்றிடு
ஆயிர மாயிரம் கவிதைகள் பொழியவே!

# வள்ளுவன் வள்ளல்

சிந்தனைச் செந்தேன் பெய்து
சீரிய அனுப வத்தை
செந்தமிழ்ப் பூவில் தந்த
செம்மனச் சான்றேன் பாரின்
அந்தமில் அகத்தில் தோன்றும்
அத்தனை உணர்ச்சி எல்லாம்
சந்ததம் பண்பா டெய்த
சாற்றினன் குறள்வெண் பாக்கள்.

எந்தவோர் மதமும் ஏற்கும்
எழில்மிகு கருத்தை ஈந்து
வெந்தழல் வேத னையால்
வேகிடும் உளங்க ளெல்லாம்
நொந்துமே நோய்வாய்ப் பட்டு
நாளுமே இழியா வண்ணம்
கந்தம்சேர் மருந்தாய் வாழ
கரு, உரு கொடுத்த வள்ளல்.

வள்ளுவர் மாண்பைப் பாரோர்
வாழ்த்தியே என்றும் போற்றி
உள்ளத்தால் உயர்ந்து நிற்கும்
உயர்தனிப் பண்பை ஓர்ந்து
கள்ளத்தால் பொய்க்கா நெஞ்சில்
காரிருள் ஓட்ட வல்ல
தெள்ளிய ஒளிவெள் ளத்தை
தேக்கியே இன்பங் காண்பர்.



# தொண்டு எதற்கு?

புதுப்புனலைப் புவிமகிழ ஈந்த தாலே
பூரிப்பால் கருமேகம் பொங்கிச் சாகும்
வெதுப்புகின்ற வேதனையில் தீய்ந்து மாயும்
விண்மதியாம் முத்ததனை ஈன்ற சிப்பி
சதுப்புநிலத் தாமரையும் பூத்து நின்றே
சகத்தோரை மகிழ்வித்த பின்பு வாடும்
மதுநிகர்த்த தேனடையைச் சேர்ந்த தும்பி
மானிடர்க்குக் கொடுத்தபின்பு மடியும் துஞ்சி.

நீயெதற்கு வாழ்கின்றாய் எந்தன் மைந்தா
நீணிலத்தில் நின்செயலால் என்ன ஈந்தாய்
பாயெதற்குப் பயனற்ற உடல்தான் தூங்க
பணிமறந்து துடிப்பிழந்த உளந்தான் வீங்க
நோயதற்குப் பயப்பட்டே ஓடு கின்றாய்
நொடிப்பொழுதில் மருத்துவனை நாடு கின்றாய்
மாய்வதற்கு மருண்டுநின்ற மாந்தர் யாரும்
மாண்புடைய தொண்டேதுவும் செய்த துண்டா.

இயற்கையன்னை என்வயிற்றில் பிறந்த பேற்றை
இச்சகத்தி லுயிர்களெல்லாம் நினைந்து வாழ
செயற்திறனால் உன்னைநீ உயர்த்திக் கொள்ள
சிந்தையெனும் கருவியையான் நினக்கே ஈந்தும்
மயக்கமுற்று வீணுக மருளு கின்றாய்
மன்பதையில் மானிடனாய்ப் பிறந்த நீயோ
பயன்விளைக்கும் தொண்டதனைச் செய்யா திங்கே
பதரினைப்போல் வாழ்ந்திட்டால் உய்வே இல்லை.

## கறுப்பனின் நிலை

வருவாய் இன்றி வாழ்வு நலிவுற
தெருவினில் பிச்சை எடுப்போர் சகஜம்
மாத முடிவினில் சம்பளம் பெற்றும்
ஏதுமிலார் போல் ஏங்கிடுவோர் பலர்
நம்மவர் மத்தியில் நிறையஉண்டு காண்
தம்வாழ்வு நினையாத் தமிழர்தம் உறவினர்
மக்கள் சமூகம் நலமுடன் வாழ
மனது வைத்தே உழைப்போர் அவர்தாம்
அன்னவர் தொடர்ந்து வேலை நிறுத்திடின்
அழகும் சுத்தமும் ஓடிப் பறந்திடும்
சாக்கடை பொங்கி நிரம்பி வழிந்திடும்
சந்தும் பொந்தும் அழுக்கினில் தேங்கிடும்
நகரின் நலம்கெட நோய்மிகப் பெருகிடும்
நாக ரீகம் அரைநொடியில் பறந்திடும்
நாற்றம் மிகுந்த நரக நகரினை
மாற்றியே சொர்க்கம் ஆக்கிடுவோர் யார்
தந்தையும் தாயும் மகளும் மருகனும்
மந்தைபோல் நிதமும் உழைப்பவர் அவரே
தொண்டுளம் கொண்ட தூயவர் தம்மைத்
தீண்டவே கூசிக் 'கறுப்பன்' என்கிறோம்.
மாத முடிவினில் அவர் பெறும் ஊதியம்
முன்னூ றின்மேல் என்றே கூறலாம்
குடி இருப்பதோ ஓட்டைக் குடிசையில்
குளிக்க முழுகவோ வசதியுமில்லை



குந்தும் குடிசைக்கு முற்பணம் என்றே
முந்திக் கொடுத்தே வட்டியைக் கழிப்பர்
அட்டைபோல் உறிஞ்சிடும் கயவர் கூட்டம்
பெட்டியில் பணத்தைத் திணித்து மகிழ்ந்திடும்
அந்தி சாய்ந்ததும் 'கறுப்பன்' குடும்பம்
சந்திக் கடையில் சாய்ந்தே கிடக்கும்
மதுவரக்க னின்பிடியில் சிக்கி வீண்
வாதில் பொழுதைக் கழித்துக் கெடுப்பர்
மதத்தின் பெருமை பேசித் திரிவோர்
நிதமும் இவர்தம் நிலையை எண்ணி
வாழும் வகையினை வகுத்திட வேண்டும்
பாழ்மனை தன்னில் ஒளியைப் புகுத்தியே!

## தமிழ் மங்கை

தொட்டுமே சுவைத்தே னென்றால்
தோகையா ளதர மென்பீர்
விட்டிடா இன்பந் துய்த்தேன்
விடிந்திடு மட்டு மென்றால்
விட்டிலின் கதியை நீயும்
வீணனே அறிவாய் என்பீர்
கட்டிளம் நயங்கள் பூண்ட
காவியத் தேவி என்பாள்.

எழில்மிகு சொல்லின் பூங்கா
ஏந்திழை நின்று ளங்கே
வழிந்ததே கவிதைச் சாறு
வனிதையி னுதட்டி னின்று
பொழிந்தன பூவை கண்கள்
பொருள்மழை தன்னை மேலும்
பிழிந்தன எந்தன் நெஞ்சை
பேரெழிற் தனங்கள் தாமும்.

வள்ளுவன் நெய்த ஆடை
    வணிகனும் சாத்தன் தந்த
தெள்ளிய மணியோ டந்த
    திருத்தக்க தேவ ரீந்த
ஒள்ளிய மணியு மற்றும்
    ஒயில்தரு வளைய லோடு
வெள்ளையாம் உள்ளம் கொண்ட
    வேந்தனின் சிலம்பு மின்ன.

சங்கத்தின் புலவர் தந்த
    சிறந்தபல் லிழைக ளோடு
கங்குலை விரட்டும் வானக்
    கலைபொழி நிலவைப் போல
அங்கயற் கண்ணி நின்றாள்
    அசந்ததே எந்த னுள்ளம்
மங்கையை அடையும் பாக்யம்
    மானிடர் யார்க்கு முண்டு.

பாட்டொலி சிலம்பே போல
    பாதத்தில் விரைந்தே ஆர்ப்ப
கேட்டஎன் நெஞ்சம் துள்ள
    கிள்ளையும் நடந்து சென்றாள்
ஆட்டத்தின் நயத்தை அந்த
    அழகொளிர் நடையில் கண்டேன்
வாட்டத்தைப் போக்க வல்ல
    வனப்பினை நல்கிச் சென்றாள்.



அவளுட லுயிரைக் கூட
    அறிதுயில் மிகவும் வேண்டும்
தவம்பல செய்தோர் தாமும்
    தமிழினைக் கூடும் போரில்
சவத்தினைப் போலே ஆனார்
    சிந்தையை யிழந்த தாலே
புவனத்தை ஆண்டு நின்றார்
    பூவையைக் கூடி நின்றோர்.

நங்கையைக் கூடி நின்றோர்
    நலிந்திட மாட்டா ரென்றும்
பொங்கிடு மழகு சேரும்
    பொருள்பொதி கலைகள் சேரும்
தங்கத்தைப் போன்ற நல்ல
    தரமிகு நயங்கள் சேரும்
சங்கமே ஏற்றிப் போற்றும்
    சகம்மெச்சும் நிலையும் கிட்டும்.

மானிடப் பெண்ணாள் நல்கும்
    மயக்கிடு மின்ப மெல்லாம்
தேனினு மினிய தேவி
    தீந்தமிழ்ப் பாவை நல்கும்
நானிலம் போற்றும் மேலாம்
    நயமிகு உணர்வுக் கீடோ
வானினு முயர்ந்த பீடு
    வண்டமிழ்க் குண்டோ ஈடு.

COLLEGE JAFFNA

## இன்னமும் உந்தன் நெஞ்சில் இரக்கமேன் சுரக்கவில்லை?

அன்னையே இயற்கை உந்தன்
அளிபொங்கும் இதயம் எங்கே
வன்னெஞ்சம் கொண்டே எங்கள்
வண்டமிழ் நாட்டை முன்பு
பன்முறை அழித்தாய் இன்பப்
பைந்தமிழ்ச் சங்கம் மாள
இன்னமும் உந்தன் நெஞ்சில்
இரக்கமேன் சுரக்க வில்லை!

நடுநிசி நாட்டு மக்கள்
நலிந்துமே தூங்கும் வேளை
கடும்புயல் ஏவி விட்டாய்
கனமழை துணையாய்ச் செல்ல
படுக்கையில் கிடந்த பாலர்
பாவையர் மற்றும் மக்கள்
நடுங்கினர் நாதி யற்று
நயவஞ்சப் புயலைக் கேட்டு.

கடலையும் தூண்டி விட்டே
கள்ளமாய்ப் பதுங்கி நின்றாய்
உடலுயிர் துச்ச மென்னும்
உறுதிபூண் மக்கள் வள்ளம்
கடலலை மேலே செல்ல
கடலது காலன் ஆகி
படபடென் றடித்தே அன்னார்
உயிர்களைப் பறித்த தந்தோ!



வெள்ளத்தில் மிதந்த மக்கள்
வீடெல்லாம் இழந்த மக்கள்
உள்ளத்தில் துன்பம் பொங்க
உடலது பசியால் வாட
வள்ளத்தில் சென்று மாண்ட
வீரரின் உற்றார் தேம்ப
கள்ளமாய்ச் சதியைச் செய்த
இயற்கையே களியா கொள்வாய்.

போர்க்களக் காட்சி போலப்
புயலது அழித்து விட்ட
சீரெல்லாம் இழந்த எங்கள்
செந்தமிழ் நாட்டைப் பாரீர்
ஊரெலாம் ஒன்றாய்க் கூடி
உவந்துமே உதவ வேண்டும்
பாரிலே மீண்டும் எங்கள்
பைந்தமிழ் இனமும் வாழ.

## இனிய வாழ்வு இலிகிதர்க்கு ஏது?

கண் விழித்திருந்து எண்ணெயை எரித்து
கருசனை யுடனே இரவெல்லாம் படித்து
பாழும் எஸ். எஸ். ஸீப் பரீட்சையில் தேறி
வாழும் வகையினைத் தேட முயன்றிடும்
வாலிபப் படையில் அங்கம் வகித்தவன்.
இலிகிதர் சேவையில் இடம் கிடைத்திடவே
வளமுடன் வாழ்க்கையைச் சீருடன் நடத்த
கொழும்புக்குச் சென்றான் குதூகலத் துடனே
நகரில் நிலவும் வாழ்க்கைத் தரத்தினை
நேரில் கண்டதும் திகைத்தே விட்டான்
சம்பளம் பெற்றுச் சஞ்சலந் தீர்த்திட
நிம்மதி யுடனே வாழலாம் என்று
அரும்பிய எண்ணம் கருகிப் புகையவே
வருவது வரட்டும் என்ற துணிவுடன்
வெள்ள வத்தையில் வீட்டில் அறையிலே
பள்ளித் தோழன் துணையுடன் இருந்தான்
வீட்டு வாடகை ஓட்டல் கணக்கு
வாட்ட சாட்டமாய் நன்கு உலவிட
அணியும் உடையின் சலவைக் கூலியும்
கணிசமா யுள்ள இன்ன பிறவும்
பணத்தைப் பெற்றிடும் மாதமுடிவினில்
மனத்தைக் குடையவே உளமது சோர
'தம்பியின் காசு' வருமென எண்ணும்
நம்பிக்கை கொண்ட பெற்றோர் தமக்கு
'மணி ஓடர்' தன்னில் காசை அனுப்பிட
வணிகக் கடையின் வருமானம் உண்டோ?
ஒண்டிக் கட்டையின் வாழ்க்கையை ஓட்டி
ஒருசில ரூபா மிச்சம் பிடித்திட
முடியாத நிலையில் உள்ள (இ)லிகிதரை
"முடித்திடு திருமணம்" என்று செப்பிடும்
மனிதரை எண்ணி மனம்மிக நொந்தான்



இனிய வாழ்வு இலிகிதர்க்கு ஏது?
உழைத்த யாவையும் கொழும்பு விழுங்கிட
இழித்த வாயராய் இல்லம் ஏகிடும்
இலிகிதர் தமக்கு இழிசொல்லு முண்டு
இலவசமாய்ப் பெறும் அரசாங்க நிதியை
"நிதமும் தின்று சேமித்து வைத்து
மாதா மாதம் ஊருக்கு அனுப்பி
சொந்த ஊர்தனைச் செழிக்க வைக்கிறார்"
இந்த உரைதனை இயம்பிடும் மக்கள்
வருந்தி உழைத்த ஊதியம் யாவையும்
திரும்பவும் கொழும்பில் செலவெனும் உருவில்
விரைய மாகிடும் விதத்தினை உணராது
வீணே பழிசொல் சுமத்துகின் றனரே!

## நட்பு

குடித்தல் புகைத்தல் பிறர்மனை சேரல்
கும்மாள மிட்டே குதர்க்கம் பேசல்
உழைத்த லின்றி ஊர்உலா வருதல்
உவகையை நாடி நோக்கினைக் குலைத்தல்
இன்னோ ரன்ன இழிதகை செயலில்
இதயம் ஒன்றி இருப்பவர் உண்டு
இவர்தம் தொடர்பை நட்பெனச் சொல்லல்
இரவைப் பகலென் றுழறுதல் ஒக்கும்
முகத்தில் பொங்கிடும் மகிழ்ச்சிப் பெருக்கு
முகிழ்த்திடும் நட்பின் அறிகுறி யென்றால்
அகத்தில் உறைந்திடும் நிலையை விளக்கிட
அளக்கும் கருவி என்னதான் உண்டு
கன்னக் கோலின் துணைதனைக் கொண்டு

களவைச் செய்தே பொருள்தனை எடுத்து
பங்கீடு செய்யும் தறுவாய் மட்டும்
பல்லிளித் திருந்த பால்ய நண்பர்
பாம்பெனச் சீறி படமெடுத் தாடி
பகைமையை வளர்த்தே நட்பினைக் கெடுத்தல்
எத்தகை நட்புக் கெடுத்துக் காட்டு
குத்தகை கொடுக்க நட்பொரு பொருளா
காதலர் தம்மிடை காண்தகு பிணைப்பு
கவின்பெறு நட்பைக் கொண்டவர் இணைப்பு
உடலுற வற்ற உன்னதப் பிணைப்பு
உணர்வை உயிராய் கருதிடும் நட்பு
அழகினைப் பருகல் அறிவினைப் பெருக்கல்
அலசி யலசி ஆய்ந்தறிந் தொழுகல்
தவறிட நேரின் தட்டிக் கேட்டே
தடுத்தாட் கொள்ளல் தகைமையைப் பேணல்
கவின்கலை நாட்டம் கொண்டுணர் வோடு
கடல்போல் பெருக்க விழைந்துழைத் திடுதல்
நா நலம் போற்றி நடுநிலை பேணி
நல்லன செய்ய மனத்தினைப் பழக்கல்
அவசர அவசிய நிலைபல நேரின்
அருந்தொண் டாற்றி அகமகிழ் வெய்தல்
பிறந்த மண்ணைக் காத்திட முனைதல்
பேசிடும் தாய்மொழி சிறந்திட உழைத்தல்
இத்தகை பண்பு கொண்டவர் நட்பு
இருள்தனை விலக்கும் ஒளிபோ லாகும்
பாரிக் கொருகவி கபிலன் கிடைத்தான்
பண்புடை நட்பின் பெற்றியை உணர்த்த
கோப்பெருஞ் சோழன் நட்புற வாட
குவலயம் மெச்சும் பிசிராந்தை கிடைத்தான்
இருபெருங் காவியம் இவர்கொண்ட நட்பு
இலக்கிய உலகில் ஒளிர்ந்திடும் என்றும்
உணர்வினில் ஒன்றி ஒளிர்ந்திடும் நட்பு



உலகினில் தோன்றுதல் மிகமிக அருமை
உணர்வும் உலகும் மாந்தரும் வாழ்ந்தால்
ஒப்பிலா நட்பும் தோன்றவே செய்யும்
குறள்எடுத் தோதும் இலக்கணந் தன்னில்
குவலயம் நின்றால் நட்போங் கிடுமே.

## காதலும் கயமையும்

சிந்தையில் தூய்மை கொண்ட
செம்மனம் போன்ற வானில்
சந்திரன் தோன்றி மண்மேல்
தண்ணொளி பரப்பும் போது
அந்தமில் களிப்புக் கொண்டே
அல்லிப்பெண் தடாகந் தன்னில்
சிந்தியே சிரிப்பை மேனி
சிலிர்த்திட மலர்ந்து நின்றாள்.

காதலின் மேலீட் டாலே
காரிகை அல்லி நெஞ்சில்
மோதியே கண்ணீர் பொங்கி
முழுமையும் பரவி னாற்போல்
சீதள வாவி எங்கும்
செறிந்துமே நிற்கக் கண்டும்
ஏதிது காதல் என்றே
ஏளனம் செய்தே வீம்பாய்.

காரிருள் உள்ளம் கொண்ட
கயவனே மரமாய் நின்ருன்
பாரினில் ஒத்த அன்பால்
பாசத்தோ டிணைய எண்ணும்
நேரிழை செம்மல் தன்னை
நெருங்கிடக் குறுக்கே நிற்கும்
கோரமே நெஞ்சில் விஞ்சும்
மனிதனே மரமே யன்ருே !

(அட்டைப்படக் கவிதை)

## அண்ணல் இயேசு

அண்ணல் இயேசு அவதரித்தார்
அவனியில் மாந்தர் உய்திடவே
புண்ணுய் உடலைப் பிய்த்திட்டே
புல்லர் சிலுவையில் அறைந்திட்டார்
கண்ணுய் இயேசு இருந்திட்டார்
கருதிய குறிக்கோள் அடைந்திடவே
மண்ணில் உடல்தான் மறைந்தாலும்
மாண்புடை எண்ணம் வாழ்கிறதே.

அன்பை அறத்தைப் போதித்தார்
அவற்றைச் செயலில் சாதித்தார்
துன்பம் தனையே துரத்திடவே
துடியாய்த் துடித்தார் சிலுவையிலே
இன்பம் உலகில் பொங்கிடவே
என்றும் ஓயா துழைத்திட்டார்
அன்ருர் நெறியில் நின்றிடுவோம்
அவனியில் அல்லல் நீங்கிடவே.



## சங்கீதப் பறவை

''இரும்பனைய இதயத்தே
குடிகொண்ட பண்பொத்த
இருளகன்றே எழில்பொங்க
ஆதவனும் எழுந்துவர
அரும்பெல்லாம் முகையவிழ்ந்தே
அரிவையர்போல் நகைசிந்த
ஆசையது தான்மிஞ்சித்
தென்றலதும் அசைந்துவர
வரம்பதனை முத்தமிட
நெற்கதிராள் வளைந்துவர
வளைதனிலே இருந்தநண்டு
வெட்கத்தால் விரைந்தோட
பரம்பொருளின் திருவெனவே
பாரெல்லாம் ஒளிதவழ
பாவையே அதிவிரைவாய்
எங்கு நீ பறக்கின்ருய்''

''பறப்பதற்கு நானென்ன
பறவையா பாவலரே
பராரிநான்; பாவையல்ல!
பார்தனிலே நிம்மதியாய்
இறப்பதற்கு மென்னுள்ள
மிணங்குதிலை என்செய்வேன்
எப்படியு மிவ்வுயிரைக்
காத்திடவே எடுத்திட்டேன்

விறகொடிக்கும் கோடரியை;
விரைகின்றேன் வேலைக்கு
விடிந்தமுதல் பொழுதுபோய்
மடியும்வரை வேலைதான்
பிறகுபோய்ச் சந்தையிலே
விலைபேசும் பெரும்பாடு
பேய்போன்ற வாழ்க்கையிது;
பேச்செதற்கு போய்வாரும்''

காலைக் கதிரவனும்
தன்கடமை முடிந்தேக
காத்திருந்த செவ்வானம்
களிப்பால் படர்ந்தொளிர
கோலைக் கரத்தேந்தி
குதித்தோடும் மந்தைகளை
குரல்கொடுத்துச் சாய்க்கின்ருன்
குழலூதும் ஆயனவன்
சோலைக் குயிலிசையை
யொத்தகுரல் காதில்விழ
சொக்கிநின்றேன்; சுற்றுமுற்றும்
பார்த்திட்டேன்; என்னென்பேன்
சாலை தனிலந்தச்
சங்கீதப் பறவைதனை
சதிராடும் விறகுக்
கட்டுடனே கண்டேன்நான்.



## அழகுற அமைத்தே உயர்த்திடுவோம்

மண்ணுள் மறைந்த மாண்புடைய
மாந்தை நகரின் சிறப்பதனை
எண்ணித் தமிழர் ஏற்றமுற
ஏந்தல் வைத்திய நாதனென்பான்
கண்ணின் மணிபோல் காப்பாற்றி
காலம் மறவாக் கோயிலதாம்
விண்புகழ் திருக்கே தீச்சரத்தை
மீண்டும் மண்ணில் ஒளிரவைத்தான்.

சிவநெறி தழைக்க உழைத்திட்ட
சிவமணி சிவபதம் அடைந்துவிட்டார்.
அவர்நெறி நின்றே திருப்பணியை
அழகுற அமைத்தே உயர்த்திடுவோம்
தவநெறி சீலம் தழைத்திடவும்
தமிழும் சைவமும் சிறப்புற்றே
அவனியில் இருளை ஓட்டுகின்ற
அருளொளி சுடர்விட ஆக்கிடுவோம்.

## உள்ளத்தால் உயர்ந்து வாழ்க!

அன்பெனும் மழைதான் பெய்ய
அறப்பயிர் தழைத்தே ஓங்கி
இன்பமாம் மணத்தை நல்கும்
எழில்மலர் பூத்தே நெஞ்ச
வன்பகை நாற்றம் போக்கி
வளம்மிகு அருளைத் தேக்கும்
உன்னத நிலையில் மக்கள்
உள்ளத்தால் உயர்ந்து வாழ்க!

1049

உ

யோ-பிரதாபன்


"6" "B"

யாழ் இந்துக் கல்லூரி

வைகை

HINDU COLLEGE * JAFFNA *

# இந்நூல் ஆசிரியர்



அரிய கவிஞன், சிறந்த பேச்சாளன், நல்ல நாடகாசிரியன், தெள்ளுதமிழ்க் கட்டுரையாளன். நெறி பிறழாத கொள்கையினன், கண்ணியமும் கட்டுப்பாடுமகொண்டோன, அடக்கம் ஒழுக்கம் ஆகியவற்றை அணிகலனய் பூண்ட பண்பு மனிதன், தமிழ் நெஞ்சன், தமிழ்த் தொண்டன் - இவரே கரவைகிழார் ஆவர்.

இவர் பிறந்த ஊர் கரவெட்டி, திகதி 23-5-1931. இவரது இயற்பெயர் க. கந்தசாமி. உள்ளூர்ப் பாடசாலையிலும், பருத்தித்துறைகாட்லிகல்லூரியிலும் கல்வி பயின்றார். அரசாங்க சேவையென்பது இவரது புறவாழ்வாய் மட்டுமே அமைய முடிந்தது. ஈழத்தின் பகுத்தறிவுத் தந்தை - புலவர் பெருந்தலை ... முரு... சனரிடம் தமிழ் இலக்கண இலக்கியம் பயிலும் ... பும் கிடைத்தது.

...பணி என்பது த...ழைக் கொண்டு "தான்" வாழ்வதல்ல, ...ழை மெச்சுவ...ல்ல, தமிழ் வாழ, தமிழினம் வாழ வழி வ...ப்பதே தமிழ்ப்பணி என்ற வைரம் பாய்ந்த நெஞ்சினரான கரவைகிழாரின் கவிதைகளி... அறமும் விறலும் எழுந்து வாழ்கின்றன. இந்த வீரிலே எழும் நாதம்தான் கரவைகிழாரின் விடுதலைக் கவிதைகளாய் ஒலிக்கின்றது.

கரவைகிழாரின் இதயக்குரல் விழுமிய அத்தனையையும் பாடுகின்றது; கீழ்மையையும் சாடுகின்றது. இறைவணக்கம், சான்றோர், விடுதலைக் கவிதைகள், குறுங்காவியம், பன்மணித்திரள் ஆகிய பகுதிகளைக் கொண்ட இத் தொகுப்பு ஒரு முழுமை பெற்ற நூலாகும். இதிலுள்ள கவிதைகள் நெஞ்சில் நெடுங்காலம் வாழும் தன்மையதாய் இருக்கின்றன. காலத்தை வெல்லும் பொருளன்றோ கவிதை!

'எழுதாக் கவிதை' எனும் கவிதைத் தொகுதி, 'தணியாத தாகம்' என்ற வரலாற்று நாடக நூல், சிதைந்தசிலை, உயர்ந்த உள்ளம், மறுமலர்ச்சி, ஆதவனே மன்னிப்பாய், தீந்தமிழ்த் தீ, விமோசனம் ஏது என்ற வரிசையில் பல நாடகங்கள் ஆகியவற்றைத் த...ள்ள கவிஞர் கரவைகிழார் தமது 39-வது வயதிலேயே அரசாங்க சே...யிலிருந்து 'ஓய்வு' பெற்றுக் கொண்டு, த...ப் பற்றுக் கொ..., தமிழ்த் தொண்டு பூண்ட, தமிழ்க் கவிஞனய் வாழ்கின்றார். இவரது நெஞ்சத்துற் பிறந்து கவிதைகள் வாழ்கின்றன ... ...க்கும் வாழும். தமிழ்ச் சமூகமே, இவ...ற ஏற்றி.

—நாக. பத்